பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 20 புதன்கிழமை (02.02.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :68

## ஹை-ஏஸ்-மோ. சைக்கிள் விபத்தில் இருவர் பலி!

### உடுப்பிட்டியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப்.2

உடுப்பிட்டி நாவலடிப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற ஹை-ஏஸ் வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

வரணி, கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த கந்தையா நந்தகுமார் (வயது21), பருத்தித்துறை, தம்பசிட்டியைச் சேர்ந்த எஸ்.தனுசியன் (வயது 8) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

தம்பசிட்டியில் இருந்து சந்நிதி ஆலயத்துக்குச் சென்ற மோட்டார் சைக்கிளும் ஹை-ஏஸ் வானும் மோதி விபத்துக்குள்ளாகின.

படுகாயம் அடைந்த நந்தகுமார் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ விவகார அமைச்சர் நேற்று திடீர் யாழ்.விஜயம்

### ஆயரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்

கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ நேற்றுத் திடீரென யாழ்ப்பாணம் வருகைதந்தார்.

நேற்று மாலை 6.15 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள், பாதிக்கப்பட்டோரின் விவரங்கள், நிவாரணப்பணிகளுக்குக் கத்தோலிக்க மதகுருமார் ஆற்றும் பங்களிப்பு ஆகியவை தொடர்பாக யாழ்.ஆயர் அமைச்சரிடம் விரிவாக எடுத்துக்கூறினார்.

வடமராட்சிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த அமைச்சர், அங்கு ஆழிப் பேரலையினால் (16 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் இணங்கிப்போக அரசுக்கு ஐ.தே.க. வற்புறுத்து!

## விட்டுக்கொடுத்து பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளுமாறும் கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 2

**அரசு தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை உதாசீனப்படுத்தும் வகையில் நடந்துகொண்டால் அது பெரும் அனர்த்தத்தையே ஏற்படுத்தும். நிவாரணப் பணிகளுக்காக உலக நாடுகள் உறுதியளித்த நிதியும் தடைப்பட்டுவிடும். யதார்த்தத்தை உணர்ந்து, விட்டுக்கொடுப்புடன் புலிகளுடன் இணங்கிச் செயற்பட அரசு முன்வரவேண்டும்.**

**- இப்படி ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.**

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட பின் அரசியல் பேதங்களைக் கைவிட்டு, புனரமைப்புப் பணிகளில் தேசிய ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருப்பதையும் ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், அரசு தொடர்ந்தும் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டால் நிபந்தனை ஏதுமின்றித் தான் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிலை வரும் எனவும் அக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனாரத்ன கட்சியின் இந்நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஏற்பட்ட பேரழிவை ஈடுசெய்யும் வகையில் இதுவரை 9ஆயிரத்து 582 கோடி ரூபா உலக நாடுகளிடமிருந்து நன்கொடையாகக் கிடைத்துள்ளது. இதனை மத்திய வங்கியே உறுதிப்படுத்தியுள்ளது. இதனைப் பங்கிட்டாலும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்க முடியும்.

ஆனால், மீள்கட்டுமானம் தொடர்பாக அரசிடம் உறுதியானதும், தெளிவானதுமான கொள்கையும் இல்லை; வேலைத்திட்டமும் இல்லை.

இன்றுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் நிவாரணம் கிடைக்கவில்லை. பொதுமக்களினதும், சமூக சேவை மற்றும் தொண்டர் நிறுவனங்களினதும் உதவிகளுடனேயே அவர்கள் உயிர் வாழ்கின்றனர்.

அரசு அனுப்புகின்றது; ஆனால், அதிகாரிகள் ஒழுங்காகச் செயற்படுத்துகிறார்கள் இல்லை - என அதிகாரிகள் மீது பழியைப் போடுகிறது அரசு. உண்மை நிலை அதுவல்ல.

பேரலை தாக்கி ஒன்றரை மாதங்கள் ஆகியும் அரசின் உதவிகள் இன்னும் கிடைக்காததால் பாதிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்த ஆரம்பித்து விட்டனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'பி' பொசிட்டிவ் இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'பி' பொசிட்டிவ் இரத்தம் உடனடியாகத் தேவைப்படுவதனால் அதனை வழங்க முன்வருவோர் உடனடியாக வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகைதருமாறு இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (8-15)

## புலிப்போராளி மீது தாக்குதல்

கடற்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இலக்கியன் நேற்று விசேட அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்நேற்று முற்பகல் 10 மணியளவில் திருக்கோவிலிலிருந்து அறுகம்பை நோக்கிப் பயணித்தவேளை அப்பகுதியில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படையினரின் காவல்நிலையப் பகுதியைக் கடந்துசென்றார். அப்போது (16 ஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்த நிவாரணநிதிச் செயற்பாடுகளை சர்வதேச நிறுவனம் கணக்காய்வு செய்யும்

### ஒளிவுமறைவுக்கு இடமில்லை என்கிறார் நிதியமைச்சர்

கொழும்பு,பெப்.2

அரசு சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்துக்கும் ஆழிப்பேரலை அனர்த்த நிதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அரசு ஏற்கனவே திட்டமிட்டபடி தனது அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்தும். ஆழிப்பேரலை அனர்த்தத்துக்காகக் கிடைக்கும் நிதி சர்வதேச கணக்காய்வு நிறுவன மேற்பார்வையுடன் கையாளப்படும். அனர்த்த நிதி ஒருபோதும் அரசின் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் படமாட்டாது.

இப்படி உறுதி கூறுகின்றார் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம.

நேற்று நிதி அமைச்சில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சமயமே நிதியமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கை வரலாற்றில் முதன்முறையாகத் தனது நிதிகொள்கையைச் சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தியது எமது அரசே. அந்த வகை (16 ஆம் பக்கம் பார்க்க)

### அரச ஏற்பாட்டில் கூட்டப்படும்

## வன்னி புனர்வாழ்வு, அபிவிருத்தி மாநாட்டை தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் புறக்கணிப்பு

வன்னி மாவட்ட புனர்வாழ்வு,அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்திற்கு வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும்,அவர்கள் எவருமே அதில் கலந்துகொள்ளவில்லை. அக்கூட்டத்தை அவர்கள் புறக்கணித்தனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.விஸ்வலிங்கம் உட்பட மாவட்டத்தின் சகல திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்த ஆண்டு மேற்கொள்ளப் படவேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## அனர்த்தப் பாதிப்பைப் பயன்படுத்தி அரசு புலிகளுடன் உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்

### ஜப்பானிய வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் கொழும்பில் கருத்து

கொழும்பு,பெப்.2

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பி முடங்கிப்போயுள்ள சமாதானப் பேச்சை முன்நகர்த்திச் செல்லவேண்டும். இந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தை அரசு அதற்காகப் பயன்படுத்தவும் வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜப்பானிய வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் ஷீஸன் டனிகவா.

நேற்று செவ்வாய் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் கூட்டத்திலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆழிப்பேரலைத் தாக்கத்தை முன்கூட்டியே அறிவிப்புச் செய்யும் நிலையம் ஒன்றை இலங்கையில் தோற்றுவிப்பதற்கு உதவ ஜப்பானிய (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீண்டும் 'சுனாமி', 'பூகம்பம்' என்று பூச்சாண்டி காட்டுகிறார் ஜனாதிபதி!

## வீண்பீதி பரப்பும் விஷமத்தனம் என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,பெப்.2

ஜனாதிபதி சந்திரிகாவும், அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் தவறான கூற்றுக்களை வெளியிட்டு நாட்டு மக்களை மீண்டும் மீணடும் பீதியடையச் செய்கின்றனர். மக்களுக்கு வெறும் பூச்சாண்டி காட்டுகின்றார்கள் அவர்கள்.

இப்படிக் குற்றம் சுமத்துகின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி.

ஜப்பானில் கடந்த ஜனவரி 18ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடைபெற்ற இயற்கை இடர் அனர்த்தங்கள் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இன்னும் பத்து வருடங்களில் இலங்கையில் மீண்டும் ஆழிப பேரலை அனர்த்தம் ஏற்படும் எனக் கண்டறியப்பட்டதாக இங்கு வந்து பூச்சாண்டி காட்டியுள்ளார்.

ஆனால், அந்த மாநாட்டில் அப்படியான ஒரு கருத்து வெளியிடப்பட்டதாக எந்த அறிக்கையிலும் காணப்படவில்லை. அமைச்சர் திஸ்ஸ விதாரண அங்கு கோப்பிக் கடையிலோ அல்லது பியர் ஷொப்பிலோ எவரோ உளறிக் கொட்டியதை இங்கு வந்து அவிழ்த்துவிட்டுள்ளார்.

அதேபோன்று மீண்டும் ஒரு பூகம்பம் ஏற்படப் போவதாகத் தமக்கு வேண்டியவர் ஒருவர் கூறினார் என ஜனாதிபதியும் குறிப்பிட்டுள்ளார். ஞானம் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத கூற்று இது.

அமைச்சரும் ஜனாதிபதியும் நாட்டு மக்களை மீண்டும் பீதியடையச் செய்கின்றனர். இது சுனாமிக் கொடுமையை விடமோசமான செயல- இப்படி விவரித்தார் ஐ.தே.கட்சி எம்.பியான டாக்டர் ராஜித சேனாரத்ன.

ஆழிப்பேரலை வந்து தாக்க முன்னர் வேண்டுமானால் சிலமணி நேரத்துக்கு முன்பு அதை அறியமுடியும் என்பது பூகோள விஞ்ஞானிகளின் கூற்று.

பத்து வருடங்களுக்கு முன் அறியமுடியும் ஏன்றால் டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட அனர்த்தங்களை எப்படியோ தடுத்திருக்க முடியுமே!

அரசியல் சுய விளம்பரங்களுக்காகவும், தமது மேதாவித்தனத்தை வெளிப்படுத்துவதற்காகவும் நாட்டுமக்களை வீணாகக் குழப்பமடையச் செய்யக்கூடாது. பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் பொறுப்பாக நடந்துகொள்ளவேணடும் என டாக்டர் ராஜித சேனாரத்ன எம்.பி. நேற்று கொழும்பில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (க-8)

# வரி கட்டாமல் 'டிமிக்கி' விடும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## இறுக்கிப் பிடிக்கத் தயாராகிறது அரசு

கொழும்பு,பெப்.2

அரசுக்கு வருமானவரி செலுத்தாமல் 'டிமிக்கி' கொடுத்துவரும் நிறுவனங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வருமான வரி செலுத்தாமல் ஏய்ப்பவர்கள் இந்த மாதம் முடிவதற்குள் அதனைச் செலுத்தவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

வருமானவரித் திணைக்களத்தின் ஆணையாளர் வீரசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நிதியமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

2003 ஆம் ஆண்டைவிட 2004ஆம் ஆண்டு அரசுக்குச் சேரவேண்டிய வருமானவரி ஒரு வீதமாக அதிகரித்துள்ளது. 14.2 வீதமாகச் செலுத்தப்பட்ட வருமானவரி 15.2 வீதமாக அதிகரித்துள்ளது.

2005 ஆம் ஆண்டில் வரிச்சட்டத்தை உாிய முறையில் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பெப்ரவரி மாதம் வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில், அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தவேண்டும். இல்லையெனில், வருமான அதிகாரிகள் அந்த நிறுவனங்களை முற்றுகையிடுவார்கள்.

நாட்டில் பதிவுசெய்யப்பட்டு நல்லநிலையில் இயங்கிக்கொண்டிருக்கும் 3ஆயிரத்து 570 பெரிய நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் ஆக ஆயிரத்து 406 நிறுவனங்கள் மட்டுமே வருமான வரியைத் தவறாமல் அரசுக்குச் செலுத்திவருகின்றன.

கடந்த டிசெம்பர் மாதம் முடிவுறும்போது 500 கோடி ரூபா வருமானவரி அரசுக்குக் கிடைத்துள்ளது.

வருமான வரித்திணைக்களத்துக்குச் சொந்தமான எந்தக் கிளையும் ஆழிப்பேரலையால் பாதிப்புறவில்லை. அனைத்து நிறுவனங்களின் விவரங்களும் எம்மிடம் அழியாமல் இருக்கின்றன. அனர்த்தம் காரணமாக அரசுக்குக் கொடைகளை அள்ளி வழங்கிய தனியார் நிறுவனங்கள் விடயத்தில் வரி விலக்குகளைச் செய்வதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

2004 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட புதிய வரிவிதிப்புகள் தொடர்பான சட்டமூலங்கள் நாடாளுமன்றில் மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அவை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இதன் மூலம் மேலும் வருமானத்தைப் பெறமுடியும்.

கடந்த அரசு வரி மன்னிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து அதை நாடாளுமன்றில் சட்டமூலமாக்கியது. வரி மன்னிப்பு எதற்காக வழங்கப்படவேண்டும் என்பது பற்றி எனக்கு விளங்கவில்லை. அது பற்றி நான் கருத்துக் கூறவும் முடியாது. அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியை யாராக இருந்தாலும் கட்டாயம் செலுத்த வேண்டும் என்பதே சரியானதாகும். - என்றார் அவர். (க-8)

# உளவளத் துணையாளருக்கு!

சுனாமி பேரலைத்தாக்கமும் பிள்ளைகளின் மன அழுத்தமும் சம்பந்தமாகச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள உளவளத் துணையாளர்கள், நட்புதவியாளர்கள் தங்கள் பெயர், செயற்படும் பாடசாலை, இடம்பெயர்ந்தோர் முகாம், பிள்ளைகளின் எண்ணிக்கை போன்ற விவரங்களை 'வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக்கல்வி அலுவலக இணைப்பாளர் கோரியுள்ளார். (8-49)

# கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கக் குழு வெள்ளியன்று கொழும்பு செல்கிறது

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் வெள்ளியன்று கொழும்பு செல்லவுள்ளது.

அரச சேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கொழும்பு செல்வதற்கான ஒழுங்குகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கொழும்பு செல்லும் இந்தக் குழுவினர், கீழுழைப்புப் பட்டதாரிகளின் நிலை குறித்து நிதியமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு மற்றும் திறைசேரி ஆகியவற்றின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். அத்துடன், கீழுழைப்புப் பட்டதாரிகளுக்குத் தகுதிக்கேற்ற நியமனம வழங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறுவர்.

கொழும்பு செல்லவுள்ள அரச சேவைப் பட்டதாரிகள் குழுவில் இணைந்துகொள்ள விரும்புவோர் 222 6917 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமது வரவினை உறுதிசெய்துகொள்ள வேண்டுமென சங்கத்தின் செயலாளர் எஸ்.பற்குணராஜா தொிவித்தார். (எ)

## வெளிநாடு செல்லும் அதிபர், ஆசிரியர்கள்

# மூன்று மாதங்களுக்கு முன்னரே லீவுக்கு விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,பெப்.2

இலங்கைக்கு வெளியே விடுமுறையில் செலலும் அதிபர், ஆசிரியர்கள் அதற்கான தமது விடுமுறை விண்ணப்பங்களை மூன்று மாதத்துக்கு முனனர் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் எம்.கே. எம்.ஹனிபா அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெளிநாடு செல்லும் அதிபர்கள், ஆசிரியர்கள் சிலர் அதற்கான லீவைப் பெறுவதற்கு முற்கூட்டியே விண்ணப்பிக்காமல, அங்கு சென்ற பிறகு லீவு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இனிமேல் அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பிவைப்போர்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலயக் கல்விப்பணிபபாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (த-13)

# அகதி முகாமின் தலைவரை தடுத்துவைத்துத் தாக்கினர்!

## காத்தான்குடிப் பொலீஸார் மீது குற்றச்சாட்டு

புதிய காத்தான் குடி அப்றார் அகதிமுகாமில் தலைவர் கே.எல்.அஹமட் சிறாஜ் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்வதற்காகத் காத்தான்குடி பொலீஸ் நிலையத்திற்குச் சென்றபோது, அவரது முறைப்பாட்டைப் பதிவுசெய்ய மறுத்த பொலீஸார் நான்கு மணிநேரம் அவரைத் தடுத்து வைத்தனர் எனவும், அவரைத் தாக்கினர் எனவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தவேண்டுமென அகதி முகாம் நிர்வாகிகளும் அங்கு தங்கியுள்ள குடும்பத் தலைவர்களும மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என நலன்புரி நிலையப் பொறுப்பாளர் எம்.ஐ.எம்.றஹ்மதுல்லாஹ் தெரிவித்தார்.

மார்க்க விரோத பொருள்களின் விற்பனை சம்பந்தமான முறைப்பாட்டினாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டதாகப் பொலீஸ் அத்தியட்சகருக்குத் தெரிவித்த நலன்புரி நிலையத்தினர், இது விடயத்தில் விசாரணை வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். அதனை ஏற்றுக்கொண்ட பொலீஸ் அத்தியட்சகர், விசாரணை மேற்கொள்ளப்படுமென உறுதியளித்துள்ளார் என அகதி முகாம் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (க-8)

# பாதாள உலகக் கொட்டத்தை அடக்க முழு அளவில் நடவடிக்கை

## சூளுரைக்கின்றார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு,பெப்.2

பாதாள உலகக் கும்பல்களின் கொட்டத்தை அடக்கும் முழு அதிகாரமும் பொலீஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு செயற்படும் இந்தக் கும்பல்களை இல்லாதொழிக்க அரசு உரிய உறுதியான- நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நேற்றுப் பாதுகாப்பு அமைச்சில் ஊர்காவல் படையினருக்கு ஊழியர் சேமலாப நிதி வழங்கும் வைபவமொன்று நடைபெற்றது.இந்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் இது பற்றித் தொடர்ந்து கூறியதாவது:-

நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. அண்மைக்காலமாகப் பாதாள உலகக் கும்பல்களின் அடாவடித்தனம் அதிகரித்து விட்டது. அரசின் உயரதிகாரிகளைக் கொன்றொழிக்கும் அளவுக்கு அவர்களின் நடவடிக்கைகள் மோசமாகியுள்ளன.

இதற்கு அரசு முடிவு காணும் வகையில் விசேட பொலீஸ் பிரிவு அமைக்கப்பட்டது. அந்தப் பிரிவினர் தமது நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர்.

இதனால் ஆத்திரமுற்றிருக்கும் பாதாள உலக நபர்களும், அவர்களின் தயவில் இருபபவர்களும் பொலீஸாருக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். இதற்கு அஞ்சி எமது செயற்பாடுகளில் எந்த மாற்றத்தையும் நாம் செய்ய மாட்டோம்.

பொலீஸ் மா அதிபர் உட்பட விசேட பொலீஸ் அதிகாரிகளுக்கு கடந்த சில தினங்களாகத் தொலைபேசியூடாகக் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அச்சுறுத்தல்களுக்குப் பயந்து நாம் பின் வாங்க மாட்டோம். விரைவில் பாதாள உலகத்தினரின் கொட்டத்துக்கு முடிவு காணப்படும் என்றார் அவர். (க-8)



சுனாமி அனர்த்தத்தில் சிக்கிப் பழுதடைந்த படகுகளைத் திருத்தும் தொழிற்சாலை நோர்வே அரசின் உதவியுடன் பருத்தித்துறையில் சென்றவாரம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த நிகழ்வில் வடமராட்சி மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அன்பு மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் அருண் படகுத்திருத்த வேலைகளை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் பிரமுகர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

*(படங்கள்: சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்)*

# பத்திரிகையாளர் சுவேந்திரன் காலமானார்

பத்திரிகையாளர் ம.சுவேந்திரன் நேற்றுமுன்தினம் தமது 53 ஆவது வயதில் காலமானார். சுமார் ஒருமாதகாலமாக நோயவாய்ப்பட்டிருந்த அவர் கொழும்பு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தார்.

கரவெட்டியைச் சேர்ந்த இவர் ஈழநாடு, தினமணி, சிந்தாமணி, பத்திரிகைகளில் கரவெட்டிச்செய்தியாளராக நீண்டகாலம் பணியாற்றி வந்தார். 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தலவாக்கலையில் வசித்துவந்த இவர், 'அருள் ஊற்று' கத்தோலிக்கத் தமிழ் இதழின் இணை ஆசிரியராகப் பணியாற்றிவந்தார்.

அண்மைக் காலத்தில் நோய்வாய்ப்பட்ட இவர், கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தபோது மரணமானார். இறுதிச்சடங்குகள் நாளை வியாழக்கிழமை கரவெட்டியில் இடம்பெறும். (அ-173)

# நேபாள அரசு நேற்று திடீரெனக் கலைப்பு! பிரதமர், அமைச்சர்கள் வீட்டுக்காவலில்!!

## அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தி அதிகாரத்தைப் பொறுப்பேற்றார் மன்னர்



மன்னர் ஜியானேந்திரா.

காத்மண்டு,பெப்.2

உலகின் ஒரேயொரு இந்து இராச்சியமான நேபாளத்தில் பிரதமர் ஷேர் பகதூர் டூபா தலைமையிலான அரசு நேற்றுத் திடீரெனக் கலைக்கப்பட்டது. அதிரடியாக அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்திய மன்னர் ஜியானேந்திரா அரசைக் கலைத்து ஆட்சிப் பொறுப்பைத் தாமே ஏற்றார்.

பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும், அவர்களின் அரசின் ஏனைய தலைவர்களையும் வீட்டுக் காவலில் வைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் காத்மண்டு முழு இராணுவக் கெடுபிடிக்கு உள்ளாகியிருக்கின்றது. பிரதமர் டூபாவின் இல்லம் உட்பட அரசுத் தலைவர்களின் வீடுகள் அனைத்தும் இராணுவ முற்றுகைக்கு உள்ளாகியிருக்கின்றன.

நாட்டில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவது உட்பட மக்கள் அளித்த ஆணையை நிறைவேற்ற அரசு தவறியதாலேயே, அதைத் தான் கலைத்து ஆட்சியைப் பொறுப்பேற்றார் என மன்னர் ஜியானேந்திரா அறிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரலில் தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யவும், நாட்டின் இறைமை, ஜனநாயகம், மக்களின் உயிர், உடைமைகள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் அரசு தவறியதால் அதைக் கலைக்கும் முடிவை எடுத்தேன். எனது தலைமையில் புதிய அமைச்சரவை விரைவில் பதவியேற்கும்.

அது அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டில் ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் மீள நிலைநிறுத்தும் - என்று அறிவித்திருந்தார் மன்னர் ஜியானேந்திரா.

மன்னர் சதிப்புரட்சி ஒன்றை நிகழ்த்தி நாட்டின் நிர்வாகத்தையும் ஏனைய அதிகாரங்களையும் கைப்பற்றியிருக்கின்றார் என நேபாள காங்கிரஸ் கட்சியின் பிரமுகர் சுஜாட்டா கொய்ராலா தெரிவித்தார்.

தலைநகர் காத்மண்டின் பிரதான பாதைகளில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தில் திடீரென ஏற்பட்ட இந்த அதிரடி மாற்றத்தினால் நாட்டில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தலைநகர்ப் பகுதியில் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் காத்மண்டுவின் சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த வெளிநாட்டு விமானங்கள், விமான நிலையம் மூடப்பட்டிருந்தமையினால் தரையிறங்க முடியாது திரும்பின.

நேபாளப் பிரதமர் டூபாவின் முன்னைய அரசு மாவோ கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று காரணம் காட்டி மன்னர் ஜியானேந்திரா இதற்கு முன்னரும் ஒரு முறை கலைத்திருந்தார். மீண்டும் இரு வருடங்களுக்குப்பின் கடந்த ஜுன் மாதம் டூபாவின் அரசு பதவிக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)



பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் மற்றும் சில அமைச்சர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்படுவதற்காக இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்.

# ஈராக்கில் நடந்த பொதுத்தேர்தல் தீவிரவாதிகளுக்குப் பெரும் தோல்வி

## இடைக்காலப் பிரதமர் விமர்சனம்

பக்தாத்,பெப்.2

தீவிரவாதிகள் என்றும் வெற்றிபெற இயலாது என்பதை ஈராக்கில் நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் உணர்த்தியுள்ளது என ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயத் அல்லாவி கூறியுள்ளார்.

பல கட்சிகளும் பங்குபற்றக்கூடியதாக ஐம்பது ஆண்டுகளின் பின்னர் ஈராக்கில் நடந்த ஜனநாயகத் தேர்தல் இதுவென்று அவர் வர்ணித்தார்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற பொதுத்தேர்தலின் நீண்ட நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

ஈராக் அதன் வரலாற்றில் புதிய சகாப்தம் ஒன்றில் அடியெடுத்து வைத்துள்ளது. ஈராக்கியர்கள் தமக்கிடையில் உள்ள பேதங்களை களைந்து விட்டு இணைந்து செயற்படவேண்டிய தருணம் இதுவாகும்.

புதிய அரசில் அனைத்து ஈராக்கியர்களும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக தேசிய மட்டத்திலான கலந்துரையாடல் ஒன்றை நாம் ஆரம்பிக்கவுள்ளோம் - என்றார் அவர்.



ஈராக்கில் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெற்று முடிந்ததையிட்டு மகிழ்ச்சியில் கூட்டணிப் படைச் சிப்பாய் ஒருவர்...

இதேவேளை, வாக்களிப்பு வீதம் குறித்துத் திட்ட வட்டமாக எதுவும் கூறமுடியாது. அதற்கு இன்னும் காலம் எடுக்கும் என்று ஈராக்கிற்கான ஐ.நாவின் தேர்தல் ஆலோசகர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத்தினருக்கு எதிரான கிளர்ச்சிகள் அதிகம் காணப்பட்ட சுனி முஸ்லிம்களின் பகுதிகளில்கூட எதிர்பார்த்ததை விடவும் வாக்களிப்பு வீதம் அதிகமாகக் காணப்படுகிறது என்றும் - அவர் சொன்னார்.

கடந்த ஞாயிறன்று ஈராக்கில் நடைபெற்ற தேர்தலை பல நாடுகள் வரவேற்றுள்ளன.

ஈராக்கின் நிலைமையைச் சீர்செய்வதற்கான அனைத்து உதவிகளையும் ரஷ்யா வழங்கும் என்று ரஷ்ய அதிபர் புடின் கூறினார்.

ஆயினும், ஈராக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இறையாண்மையை நிலைநிறுத்துவதற்கும் நிறைவுசெய்ய வேண்டியவை இன்னமும் அதிகம் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தல் கிளர்ச்சியாளர்களுக்கும் தீவிரவாதிகளுக்கும் எதிரான பெரும் வெற்றி என்று ஈரான் தெரிவித்தது.

அமெரிக்கா தலைமையில் ஈராக்கிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டபோதும் முன்னர் கடுமையாக எதிர்த்த பிரான்ஸும் ஜேர்மனியும் இந்தத் தேர்தல் ஜனநாயக வழிமுறைக்கு நாட்டைக் கொண்டு செல்வதற்கான முக்கிய முன்னேற்றம் என்று வர்ணித்தன. (த-க)

# 1,400 அமெ.படையினர் இதுவரை ஈராக்கில் பலி!

நியூயோர்க்,பெப்.02

ஈராக்கில் இடம்பெற்றுவரும் வன்செயல்களால் இதுவரை ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், அமெரிக்க நிதியுதவியுடன் பணியாற்றிய பொதுமக்கள் 232 பேரும் கொல்லப்பட்டுள்ளனர் என அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க நிதியுதவியுடன் ஒப்பந்த நிறுவனங்களில் பணியாற்றும் பொதுமக்களையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விடுகின்றனர்.

இதுவரை இத்தகைய நிறுவனங்களில் தொழில் புரிந்த 728 பணியாளர்கள் காணாமல் போயிருக்கின்றார்கள்.

தீவிரவாதிகளின் இத்தகைய செயற்பாட்டினால் ஊழியர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லை என்றும் -

இதனால், ஈராக்கில் நல்வாழ்வுத் திட்டங்களைத் திட்டமிடப்பட்ட காலத்தில் நிறைவேற்ற முடியாது தாமதம் ஏற்படுகின்றது என்றும் -

அமெரிக்கத் தரப்பில் கவலைத் தெரிவிக்கப்படுகிறது. (த-க)

உலக அரங்கில்

# மாவோ கிளர்ச்சித் தலைவர்களின் தந்தைமார் மூலம் சட்டமுயற்சி

காத்மண்டு,பெப்.2

நேபாளத்தில் அரசுக்கும், மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவ மாவோயிஸ்ட் தீவிரவாத தலைவர்களின் தந்தைமார் சம்மதம் தெரிவித்துள்ளனராம்.

நேபாளத்தின் சமாதான முயற்சிகளுக்கான ஏற்பாட்டாளர் சுஜிப் ஹலர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த 9வருடங்களாக மாவோ தீவிரவாதிகளுக்கும், நேபாள அரசுக்கும் இடையில் நடந்துவரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியின் முதற்கட்டமாகவே கிளர்ச்சித் தலைவர்களின் தந்தைமாரின் உதவியைத் தாம் நாடியிருக்கின்றார் என அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளை அடுத்தவாரம் ஆரம்பிக்க மாவோ கிளர்ச்சியாளர்களின் தலைவர் பிரசந்தவின் தந்தையும், பாதல் எனப்படும் மற்றுமொரு முன்னணித் தலைவரின் தந்தையும் சம்மதித்துள்ளனர்.

இம் முயற்சிகளை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல அவர்கள் உதவுவார்கள் என நான் நம்புகிறேன் - என்றார்.

நேபாளத்தை ஒரு கம்யூனிஸ்ட் குடியரசாக மாற்றுவதற்காகவே மாவோ கிளர்ச்சியாளர்கள் போராடிவருகின்றனர்.

மாவோ கிளர்ச்சியாளர்களுக்கும், அரசுக்கும் இடையில் கடந்த 9 வருடங்களாக இடம்பெற்றுவரும் மோதல்களில் 10ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-க)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street,
Colombo-13 Tel.:2430782 Fax:2430782
(C/38614)
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

# சிறுவர்களுடன் பாலியல் முறைகேடு; மைக்கல் ஜக்ஸன் மீது வழக்கு

லொஸ்ஏஞ்சல்ஸ்,பெப்.2

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனிடம் தகாதமுறையில் நடந்துகொண்டார் எனத் தெரிவித்து பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்ற விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.



தனது பாதுகாப்புக் குழுவினருடன் ஜக்ஸன் நீதிமன்றத்துக்கு வருகைதந்தபோது...

பொப் பாடகர் மைக்கல் ஜக்ஸன் சிறுவர்களுடன் தகாத உறவுகொண்டார் எனக் கலிபோர்ணியாவில் உள்ள சாந்தா மரியா நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பான வழக்கே நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்விவகாரம் குறித்து வழக்கு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட முன்னர் ஜக்ஸன் கூறியதாவது:-

இவ்வாறான வெறுக்கத்தக்க குற்றச்சாட்டுகள் கூறப்படுவதால் என் வாழ்க்கை துயர் மிகுந்ததாகிவிட்டது.

குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த எனது 'நெவர்லாண்ட்'வீட்டில் ஏராளமான குழந்தைகள் வந்து விளையாடி மகிழ்வார்கள்.

அதுபோலவே இந்தச் சிறுவனையும் விளையாட அழைத்துச் சென்றேன்.

ஆனால், இந்தச் சிறுவனின் பேராசைமிக்க பெற்றோர் என் மீது அபாண்டமாகப் பழிசுமத்தியுள்ளனர். என்னை களங்கப்படுத்த முயல்கின்றனர்.

உண்மை வெளிவரும்போது நான் குற்றமற்றவன் என்பது நிருபிக்கப்படும். வெறுக்கத்தக்க வகையில் என்மீது கூறப்படும் புகார்களால் என்னுடைய குடும்பத்தினரும், நானும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளோம் - என்றார்.

ஜக்ஸன் வீட்டிலிருந்து சுமார் 50கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சாந்த மரியா நீதிமன்றத்தில் ஆரம்பமாகும் இந்த விசாரணை இன்னும் பல மாதங்கள் நீடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த-க)

# பாடசாலை மாணவர்களிடையே 'சுனாமி' அனர்த்த ஓவியப் போட்டி

## மாகாணக் கல்வியமைச்சின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,பெப்.2

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களிடையே, சுனாமி அனர்த்தம் தொடர்பான ஓவியப் போட்டியொன்றை மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் தரம் 5 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் தமது ஓவியங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த வலயக் கல்விப்பணிப்பாளர்களிடம் ஒப்படைக்குமாறு அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கேட்டுள்ளார்.

போட்டி தொடர்பான மேலதிக விவரங்களை வலயக் கல்விப்பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

போட்டிக்குக் கிடைக்கும் ஓவியங்களைக் கொண்டு கண்காட்சியும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3-202)

# குடிசன மதிப்பீடு மேற்கொள்ள திணைக்களம் நடவடிக்கை

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் குடிசன மதிப்பீடொன்றை மேற்கொள்ள குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளி விவரங்கள் தொடர்பான திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சுனாமியினால் அழிந்து போயுள்ள சகல மாவட்டங்களையும் உள்ளடக்கி மேற்கொள்ளப்படவுள்ள இந்தக் குடிசன மதிப்பீட்டில் பெறப்படும் விவரங்கள் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் மற்றும் ஏனைய சகல செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளதாக மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, இச்செயற்பாட்டுக்கு மக்களின் ஒத்துழைப்பை வழங்குமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பீ.டவ்லிவ் நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# சுனாமி நிவாரணப் பணியில் பால்நிலை அபிவிருத்தி நிறுவனம்

யாழ்ப்பாணம்,பெப்.2

மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைப் பல்வேறு இடங்களிலும் மேற்கொண்டு வருகின்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை, கம்பர்மலை வித்தியாசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருள்களை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. (10-202)



மூளாய் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினருடன் இணைந்து நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை எடுக்கப்பட்ட படம்.

# கிழக்குக் கரையில் ஒதுங்கும் இந்தோனேசியப் பொருள்கள்

காரைதீவு,பெப்.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது கடல் காவுகொண்ட இந்தோனேசியப் பொருள்கள் தினமும் கிழக்குக் கடற்கரையில் ஒதுங்குகின்றன எனக் கூறப்படுகிறது.

கடந்த மூன்று தினங்களாக ஆயிரக்கணக்கான மரக்குற்றிகள், தேங்காய்கள் பல்வேறு வீட்டுப்பாவனைப்பொருள்கள், பல்புகள் போன்றவை ஒதுங்கிவருகின்றன.

கரை ஒதுங்கும் பொருள்களுக்காக மக்கள தினமும் காலைப் பொழுதில் கடற்கரையோரத்தில் முண்டியடிப்பதையும் காணக்கூடியதாயுள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து வந்த இரண்டு பல்புகளைக் கரையில் எடுத்த காரைதீவு இளைஞர் ரமேஸ் என்பவர் அதனைக் கொண்டு மின் இணைப்பை ஏற்படுத்தியபோது அது பிரகாசத்துடன் எரிந்ததைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டனர். இன்றும் அது எரிந்து கொண்டிருக்கிறது.

ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது இந்தோனேசியா என்பது தெரிந்ததே.

பல பொருள்களில் 'இந்தோனேசியா' எனப பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

தற்போது கரையொதுங்கும் இந்தோனேசியத் தேங்காய்கள் இலங்கையில் காணப்படும் சாதாரண அளவு தேங்காய்களைவிட நீளமாகவும, விசித்திரமாகவும் தோற்றுகின்றன. மக்கள் அவற்றைப் பொறுக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். மரங்களும், குற்றிகளும் கூட பயன்படுத்தப்படுகின்றன. (க-3)

# நலன்புரி நிலையங்களுக்கு வழங்கிய இணைப்புகளை ரெலிகொம் நிறுவனம் 31ஆம் திகதியுடன் துண்டிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் பயன்பாட்டுக்கென 'ரெலிகொம்' நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வந்த இலவச இணைப்புக்கள் யாவும் நேற்று முன்தினம் முதல் துண்டிக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை ரெலிகொம் நிறுவன யாழ். பிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால இடம்பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மருதங்கேணி மற்றும் கரவெட்டி உட்பட பல இடங்களிலும் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களின் நன்மை கருதி அவர்களின் பயன்பாட்டிற்கென ரெலிகொம் நிறுவனத்தினால இலவச தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த இணைப்புக்களை ஜனவரி மாதம் 31ஆம் திகதியுடன் துண்டிக்குமறு தலைமையகத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதனை அடுத்தே அந்த இலவச இணைப்புக்கள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன என்றார். இதேவேளை. ரெலிக்கொம் நிறுவனத்தின் இந்தத் திடீர் நடவடிக்கையால் நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் பாதிப்படைந்ததாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. (10-5-ரி)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழா

வைத்திய கலாநிதி S.சுப்பிரமணியம் (P.S) அவர்களின்

**சிலை திறப்பு வைபவம், சிறப்பு மலர் வெளியீடு**

காலம்: **இன்று 02.02.2005 புதன்கிழமை**
நேரம்: **பிற்பகல் 3.00 மணி**
தலைவர்: திரு.க.சிவாஜி அவர்கள் (அதிபர்)
**பிரதம விருந்தினர்:** திரு.செ.பத்மநாதன் அவர்கள்
(முன்னாள் அரச அதிபர், யாழ்ப்பாணம்)
**சிறப்பு விருந்தினர்:** திரு.திருமதி.பாலசுப்பிரமணியம் தம்பதிகள்
(Certified, Public Accountant)
(தலைவர், ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம் அமெரிக்கா)

**ஆசியுரை:** நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
பிரம்ஸ்ரீ ப.ஜெயக்குமாரக்குருக்கள்
பிரதமகுரு, மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில்

**வாழ்த்துரைகள்:** பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி றெ.இருதயநாதன் அவர்கள
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்)
திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் கல்விவலயம்)
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா அவர்கள்
(தலைவர், மெய்யியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
திரு.சு.பரமநாதன் அவர்கள்
(முன்னாள் உதவிச்செயலாளர்,யாழ்.மாவட்ட அபிவிருத்திச சபை,
முன்னாள UNDP திட்ட இணைப்பாளர்)
திரு.ஆர்வலன் அவர்கள்
(கல்விப் பொறுப்பாளர், யாழ்.மாவட்டம்)
திரு.சி.திருவாகரன் அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், வலிதெற்கு)
Dr. அ.சக்திவேல் அவர்கள்
(பழைய மாணவர், கொழும்பு)
திரு.செ.குபேரநாதன் அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
திரு.அ.தற்பரானந்தன் அவர்கள்
(முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கந்தரோடை, சுன்னாகம்.
2005.01.25
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், விழாக்குழுவினர்.

## சாரணர் பயிற்சி நாளை

வடமராட்சி,பெப்.2

பருத்தித்துறை மாவட்ட சாரணர் பயிற்சிக் குழுவினரால் ஒத்திவைக்கப்பட்டிருந்த சாரணர் தலைவர்களுக்கான அவத்தை II பயிற்சிநெறி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சிநெறி இரு தினங்கள் நடைபெறும். பயிற்சியாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-173)

## மெய்வன்மைப் போட்டி

மானிப்பாய்,பெப்.2

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் கே.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (10-202-90)

## இருநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.2

திருமறைக் கலாமன்றத்தில் அங்கம் வகிக்கும் மகளிர் அமைப்புகளுக்கான இருநாள் பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் வவுனியா, குருமன்காடு கிராமிய அபிவிருத்தி ஸ்தாபனத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள திருமறைக் கலாமன்றங்களைச் சேர்ந்த மகளிர் அமைப்புகளின் தலைவர்கள் உட்பட ஒவ்வொரு அமைப்புகளிலிருந்தும் நால்வர் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

'பெண்களின் மாற்றம் அன்றும் இன்றும்', 'அவலச் சூழலில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்', 'சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மறுவாழ்வு' மற்றும் 'பெண்களின் தற்போதைய உரிமைகள்' உட்படப் பல விடயங்கள் பற்றிக் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (10-5-ரி)


பிரத்தியேக வகுப்புகள்
A/L 2007
ஆசிரியர்
T.தவசேகர்
START 05-02-2005
சனி 3.00 P.M.
D.C.A. மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 04 - 03 - 1979

இறப்பு 15 - 01 - 2004

**ஸ்ரீ பாலகணேசமூர்த்தி சுதாகர் [மேனன்]**

*நண்பா மரணம் உனக்கல்ல!*
*எம்முடன் கூடித்திரிகிறாய்...*
*சேர்ந்து சிரிக்கிறாய்... பேசி மகிழ்கிறாய்...*
*உன் பிஞ்சுமுகமும் அன்பு வார்த்தையும்*
*பண்பும் பரிவும் இப்படி எத்தனை தான் உன்னில்!*
*நட்பு மரணிக்கும் வரை உனக்கு மரணமில்லை.*

வட்டுவத்தை.
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

**நண்பர்கள்.**

(41596-19-45-42)

## மரண அறிவித்தல்

### டாக்டர் பொன்னம்பலம் பரமசுவாமி

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட Dr.பரமசுவாமி பொன்னம்பலம் அவர்கள் 30.01.2005 அன்று ஆஸ்திரேலியாவில் அடிலெயிடில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலேயன் பென்சனியர் சு.பொன்னம்பலம் - சின்னாச்சிப்பிள்ளையின் சிரேஷ்ட புதலவனும் காலஞ்சென்ற முன்னாள் Times of Ceylon உரிமையாளர் ஆ.சங்கரப்பிள்ளையின் மூத்த மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் புஸ்பமலர் (Registered nurse), காலஞ்சென்ற பரராஜசிங்கம் (தோட்ட Suprendant - மஸ்கெலியா), பரமானந்தம் (mayas & Co.) Dr.பரசுராமன், Dr.பரஞ்சோதி, புஸ்பவதி, புஸ்பரத்தினம், புஸ்பவனம்,(Engineer) அர்ச்சுனன், (Technician), பரமேஸ்வரன் (Technical officer), புஸ்பதேவி (Accountant), ருக்மணி (Computer Programmer), Dr.பரசிவம், லலிதா(Accountant) ஆகியோரின் அருமைத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் அடிலெயிடில் நாளை (03.02.2005) வியாழக்கிழமை நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/12, QUINTON Court,
WYNNVALE SA 5127,
Adilaids,
Australiya,
T.P.:08 82892172

தகவல்:
Dr.பரசுராமன் (மகன்).

(C/40749)(39-19-45-42)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# இழுபறி நீடிப்பதன் அடிப்படை என்ன?

"தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்புத் தொடர்பான புனரமைப்புப் பணிகள் புலிகளின் ஒத்துழைப்புடன்தான் - அவர்களுடன் இணைந்தேதான் - செயற்படுத்தப்படும். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் அங்கு எத்தகைய பணிகளையும் செய்யமுடியாது. புலிகளின் பங்களிப்புடன்தான் அப்பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது என்ற அரசின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை" - என்று அடித்துக் கூறியிருக்கின்றார் நீதி அமைச்சர் டபிள்யூ.டி. ஜோன் செனவிரத்ன.

அவர் கூறுவது அரசின் உண்மையான - உறுதியான - நிலைப்பாடா என்பதை ஊர்ஜிதப்படுத்தவோ ஊகிக்கவோ முடியாவிட்டாலும், புலிகளின் பங்களிப்பின்றி அவர்களின் நிர்வாகப் பிரதேசத்தில் எதுவும் செய்ய முடியாது என்ற அரசின் கூற்று யதார்த்த நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது என்பதை மட்டும் கூறமுடியும்.

ஆழிப்பேரலை அனர்த்தப் பாதிப்பையும் அதையொட்டிய மீட்பு நிவாரண, மீள் கட்டுமானப் பணிகளையும் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான முதற்படிகளாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்கான நல்லதொரு வாய்ப்பும் சூழ்நிலையும் கிட்டியிருக்கின்றன என்றெல்லாம் பல தரப்பிலும் கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆனால், யதார்த்த நிலைமை அதற்கு முரணாக உள்ளது என்பது மெல்லமெல்ல வெளிப்படத் தொடங்கியிருக்கின்றது. இலங்கையின் பிரதமரே அந்த உண்மையை ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டார் என்பதுதான் நிலைவரம்.

"ஆழிப்பேரலை அனர்த்தம் இலங்கை அரசியலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, மேலும் நெருக்கடியையே தோற்றுவித்துள்ளது" - என்பதைப் பிரதமர் ராஜபக்ஷ பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அதேசமயம், ஆழிப்பேரலை அனர்த்த விளைவுகள் யுத்தத்துக்கும் கூட வழி செய்யலாம் என்று சந்தேகம் தெரிவித்திருக்கின்றார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான சந்திரசேகரன்.

"ஆழிப்பேரலைத் தாக்குதல் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு ஓர் உந்துசக்தியாக அமையும் என்று கூறப்படுவதை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. காரணம், ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரச உளவுப் படைகள் ஊடுருவி நிவாரணப் பணி என்ற பெயரில் புலிகளைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன. எனவே, இந்த அனர்த்த விளைவுகள் சமாதான முயற்சிகளுக்குச் சாதகமாக அமையுமா என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும்"- என்று கூறியிருக்கின்றார் சந்திரசேகரன் எம்.பி.

அனர்த்த நிவாரணம், மீட்பு மற்றும் மீள் கட்டுமான நடவடிக்கைகளில் - நாட்டை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் - புலிகளை இணைத்து, அரவணைத்துப் போவதன் மூலம், இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சாதக சூழ்நிலையை அரசு தோற்றுவிக்கவேண்டும் என்றே சர்வதேச சமூகத்தினர் உட்பட அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இந்த மீள்கட்டுமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகப் புலிகளுடன் சேர்ந்து இணக்கமான பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஆக்கபூர்வமான நிலையை அரசு ஏற்படுத்தமுடியும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதன்பெயரில், பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் - பேச்சுக்கள் - நடக்கின்றன.

ஆனால், இது சம்பந்தமான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்தில் தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, இணங்கினால் அது தனக்குப் பின்னர் எதிராக மாறிவிடும் என்று கருதி, அதற்கு இணங்காமல் இழுபறிப்படுகின்றது அரசுத் தரப்பு.

இந்தப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான அடிப்படை விடயங்களில் விட்டுக்கொடுப்பது பின்னர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விடயத்தில் முன்னுதாரணமாகிவிடும் என்றும் -

இப்போது எடுத்த கொள்கை முடிவை, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விடயத்திலும் பின்பற்றுமாறு தமிழர் தரப்பும் சர்வதேச சமூகமும் தன்னை வற்புறுத்தும் என்றும் -

இலங்கை அரசு கருதுவதனால்தான் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் விட்டுக் கொடுக்காமல் விடாப்பிடியாக அது நிற்கின்றது.

பொதுக் கட்டமைப்பின் வடிவத்தையும் அதிகாரத்தையும் இறுதிசெய்வதில் இழுபறி நிலைமை நீடிப்பதற்கு இதுதான் முக்கிய காரணம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை விவகாரத்தை அடிமனதில் வைத்துக்கொண்டு, அந்தப் பின்னணியில், அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விவகாரத்தையும் அரசு நோக்குமானால், அத்தகைய பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது சாத்தியமற்றதாகிவிடும் என்பது நிச்சயம்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த

# 18 ஆயிரம் குடும்பங்களுக்கும் காணி வழங்க முடியுமா?

## விவரமான அறிக்கை சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு.பெப்.2

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த 18 ஆயிரம் குடும்பங்களும் மீளக்குடியமரக் காணி வழங்க முடியுமா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி சட்டமா அதிபரை உயர்நீதிமன்றம் கோரியுள்ளது.

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த தம்மைத் தமது வீட்டில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் இராசதுரை ஆகியோர் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டவாதி, மனுதாரர்களின் வீடு, விவசாய நிலங்கள் பலாலி விமானநிலையத்துக்கு சமீபமாக அமைந்துள்ளன. அந்தப் பகுதியில் மீளக்குடியமரவோ, விவசாயம் செய்யவோ அனுமதிக்கமுடியாது என அரசு கூறுகின்றது. இவர்களது உரிமைகள் பாதிக்கப்பட்டால், வேறு இடங்களில் காணி வழங்க அரசு தயாராகவிருக்கின்றது என்று தெரிவித்தார்.

"வலி.வடக்கில் இருந்து 18 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன. அவர்களுக்கு மீள் குடியமரவும் விவசாயம் செய்யவும் காணி வழங்கக் குடாநாட்டில் போதிய இடம் இல்லை. சகலருக்கும் காணி வழங்க வசதி இல்லை." என்று மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.பாலேந்திரா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கும், விவசாயச் செய்கைக்கும் வழங்கக்கூடிய காணிகளின் விவரங்களை வரைபடங்களுடன் சமர்ப்பிக்கும்படி எதிர் மனுதாரருக்கும் -

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களைக் குடியமர்த்த போதிய காணி இல்லை என்பதை ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கும்படி மனுதாரர்களுக்கும் - உத்தரவிட்ட நீதியரசர் விசாரணையை மார்ச் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (3)

# விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளும் வரை தொலைபேசி இணைப்புகள் இடைநிறுத்தம்

## யாழ். பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.2

யாழ். பிராந்திய தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை தனிப்பட்ட வதிவிடங்களுக்கான இணைப்புகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் என்.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ். பிராந்திய நிலையத்தின் மூலம் குடாநாட்டு மக்களின் தேவைக்கேற்ப முழுமையாகத் தொலைபேசி இணைப்புகளை வழங்கமுடியாதுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் பிராந்திய தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அதுவரைக்கும் தனிப்பட்ட வதிவிடங்களுக்கான தொலைபேசி இணைப்புகளை வழங்கமுடியாதுள்ளது.

பரிவர்த்தனை நிலையத்தின் விரிவாக்க நடவடிக்கை நிறைவடைந்த பின்னர் வதிவிட தொலைபேசிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(10-5-11-ரி)

# வல்வெட்டித்துறையிலும் விரைவில் மீன்பிடிப் படகு திருத்தும் நிலையம்

## அமைத்துக்கொடுக்க நோர்வே சம்மதம்

வடமராட்சி.பெப்.2

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், கட்டுமரங்களைத் திருத்துவதற்கென நோர்வே அனுசரணையுடன் மற்றொரு படகு திருத்தும் நிலையம் வல்வெட்டித்துறைப் பகுதியில் திறக்கப்படவுள்ளது.

நோர்வே அனுசரணையுடனான ஏ.ஜே.பிஸ்ஸில் நிறுவனம் ஏற்கனவே மூன்று லட்சம் ரூபா செலவில் படகு திருத்தும் நிலையம் ஒன்றை ஆரம்பித்துச் செயற்படுத்தி வருகிறது.

இந்நிறுவனத்தினால் இதுவரை 25 படகுகள் திருத்தப்பட்டுள்ளன.

இன்னுமொரு படகு திருத்தும் நிலையத்தை வல்வெட்டித்துறைப் பகுதியில் திறந்து பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவுமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசம் இந்நிறுவன மேலாளர் சண்விக்கிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நிறுவன மேலாளர், மற்றொரு படகு திருத்தும் நிலையத்தை விரைவில் வல்வெட்டித்துறைப் பகுதியில் திறக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் படகுகள், கட்டுமரங்களை இந்நிறுவனம் இலவசமாகவே திருத்தி வழங்கிவருகிறது. இந்நிறுவனத்தில பணிபுரிய உள்ளூர் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(கு-173)

# உளவளத் துணையாளர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.பெப்.2

திருமறைக் கலாமன்றத்தின் உளவள துணையாளருக்கான ஒருநாள் கருத்தரங்கு நேற்றுக் காலை 10 மணியளவில் மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் அமெரிக்கத் தேசிய கல்லூரி உளவளத்துறை விரிவுரையாளர் கலாநிதி ஜெனட் லைவாலி கருத்துரை வழங்கினார்.

இதில் 20 இற்கும் மேற்பட்ட உளவளத் துணையாளர்கள் கலந்துகொண்டனர்.

(கு-190)

# கடற்றொழிலாளர் சமாசத்துக்குக் கணனி

வடமராட்சி.பெப்.2

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் அலுவலகப் பணிகளுக்கென கணனி ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் -

போட்டோஸ்ரட் இயந்திரம் ஒன்றை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளனர். (கு-173)

# தமது மீள்குடியமர்வுக்கு ஆவன செய்யுமாறு மணலாறு பிரதேச மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

கிளிநொச்சி.பெப்.2

மணலாறு பிரதேசத்தில் இருந்து 1984ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் வெளியேற்றப்பட்ட மக்கள் தமது மீள்குடியமர்வு தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

1984ஆம் ஆண்டு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் இருந்து இந்த மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்பும் இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக அரசு அக்கறை எடுக்கவில்லை.

இதன்பின்பு இந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர் ஊடாக அரசுக்கு மனுவொன்று கையளிக்கப்பட்டபோதிலும் அரசு இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

இடம்பெயர்ந்த இந்த மக்கள் சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலாவது இம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக அரசு அக்கறை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொக்கிளாய், கருநாட்டுக்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(10-12)

# மீளக்குடியமரும் மக்களுக்கும் பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர்

வடமராட்சி.பெப்.2

வடமராட்சி வடக்குப் பிரதேசத்திலும் வடமராட்சி கிழக்கில் குடத்தனை, மணல்காடு ஆகிய கிராமங்களிலும் மீளக்குடியேறிவரும் மக்களுக்கும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகள், பருத்தித்துறைப் பிரதேச சபை ஆகியன பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகத்தைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளன.

இச்சபைகளுக்குச் சொந்தமான பவுஸர் வண்டிகளுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச சபைகள், திணைக்களங்கள் என்பனவற்றுக்குச் சொந்தமான பவுஸர் வண்டிகள் குடிதண்ணீர் விநியோகத்துக்கென மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்துக்கு வெளியே இருந்து நீர் வளச்சபை, சமூகசேவைத் திணைக்களம் என்பனவற்றுக்குச் சொந்தமான பவுஸர் வண்டிகளும் இச்சேவைக்கெனப் பெறப்பட்டுள்ளன. (கு -173)

## நாளை

தை 21
வியாழக்கிழமை
03.02.2005
திதி : நவமி
மாலை 6.21வரை
நட்சத்திரம் : விசாகம்
காலை 8.52 வரை
சுபநேரம் : 8.05 - 9.35
ராகுகாலம் : 02.05 - 3.35
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உரிமைப்போர் ஓர் உலராத ஊற்று. தடைக்கற்களால் அதைத் தடுத்துவிட முடியாது

- அண்ணாதுரை.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள PEUGEOT 403 3 SRIxxxx தொடர் இலக்கமுடைய கார் விற பனைக்குண்டு. மோட்டார் சைக்கிளுக்கு மாற் றியும் கொடுக்கப்படும். தொடர்பு: மு.விமல நாதன், 27/20, புங்கன்குளம் வீதி (நாகராசா லேன்), பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.(41484)

## காணி விற்பனைக்கு

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக் குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகொள்ள வும். K.சிவராஜா, "ராஜாவாசா", 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873, மகா - 0776203974. (41442)

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி - நல்லூர் வீதியில் 4000 சதுரஅடி கொண்டதும் நிலத்தின்கீழ் அறைகளுடன் சுற்றுமதில்களுடன் கூடியதுமான 6பரப்புக் காணியில் மாடி வீடு உடனடியாக (மேலதிக கட்டடத்துடனும்) விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு: க.சிவராஜா, "ராஜாவாசா", இல.151, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873 (சிவராஜா), 0776203974 (மகா).(41383)

## காணி, வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 6¼ பரப் புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடாபு: இல.22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (41372)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் இன்று (02-02-2005) மாலை விநியோகிக்கப்படும். பதிவு களை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, P.ரவி, துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. T.P.: 222 2867, 222 3529. (41563)

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 14.02.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன ணாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (41599)

## தேவை

கஷ்டப பிரதேசத்திலுள்ள தென்னந்தோட் டத்தை நிர்வகிக்கவும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், விவசாய டிப்ளோமா வுடன் அனுபவமும் உள்ளவர் உடனே தேவை. சுயவிவரத்துடன் 2005-02-15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சம் பளம் பேசித் தீர்க்கப்படும். (சி-40732)

சரஸ்வதி - பிருந்தாவனம் அறக்கட்டளை,
171, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

கோணாவளை லேன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: Dr.லோக நாதன், 197, ஆடியபாதம் வீதி, திருநெல் வேலி. T.P.: 222 5058. (41595)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச் சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம. (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென் ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி, நல்லூர். (41411)

## தவறிவிட்டது

அளவெட்டி, குருக்கள் கிணற்றடி விநாய கர் ஆலய' ஆவணங்கள் மருதனார்மடம் - உரும்பிராய்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் க.ஞானேஸ்வரன், சிமெந்துக் கூட்டுத் தாபனம், ஒஸ்கா லேன், உரும்பிராய் என்ற முக வரியுடனோ, 222 2239, 222 3470 என்ற T.P.No. உடனோ தொடர்புகொள்ளவும். சன் மானம் வழங்கப்படும். (41603)

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் சத்திரச் சந்திக்கு அருகில் முதலாம் மாடிக்கடை வாடகைக் குண்டு. தொடர்பு: சி.பரமநாதன் T.P. 0777 739836. (41605)

ஆஸ்பத்திரி வீதியில் சத்திரச் சந்திக்கும் கொட்டடிச் சந்திக்கும் இடையில் கடை கொமி சனுக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: சி.பரம நாதன். T.P. 0777 739836. (41606)

## கார்மன்ஸ் வேலைக்கு ஆள் தேவை

றொஷானி காமன்சிற்கு
தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை
தொடர்பு: றொஷானி காமன்ஸ்
இல.263/1, இராஜகாரியார் வீதி, மானிப்பாய்.
கிளை: றொஷானி காமன்ஸ்
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(41601)(21-11-45-26)

## THE HALO TRUST — Vacancy
### POST OF DEMINER

The Applicant should have the following Qualifications:
★ Very Hard worker
★ Physically fit
★ Age: Should be less than 35 years
The selected person should be prepared to work in the Mine fields.
Salary: Rs. 10,500/=
Please send your Bio data immediately

To: **The Operations Manager**
The HALO Trust
655, Navalar Road, Nallur, Jaffna.
(41568)(42-11-45-26)

## 50ஆவது ஆண்டு திருமண நிறைவு நாள் வாழ்த்து



திரு. திருமதி கனகரத்தினம் தவமணி

இல்லற வாழ்வில்
இன்று பொன்
விழாக்காணும்
திரு.திருமதி
கனகரத்தினம்
தவமணி
தம்பதிகள்
சீரோடும் சிறப்போடும்
இன்னும் பல்லாண்டு காலம்
வாழ்ந்து சிறப்புற்றுத் திகழ
எல்லாம் வல்ல இணுவிற்
பதியுறையும் ஸ்ரீ பரராஜ
சேகரப்பிள்ளையாரை
வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டி மற்றும் சகோதர, சகோதரி,
மைத்துனர், மைத்துனி.

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு. (41495)(39-11-45-26)

## சமையல் பாத்திரங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங் கிக்கிளை ஊழியர்கள் தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய நலன் புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங் களுக்கு ஒருதொகுதி சமையல் பாத்திரங் களை வழங்கியுள்ள னர். (த-173)

## ENGLISH TRANSLATOR

SHANTHIHAM (Association for Health and Counselling), requires an English Translator to work with an expatriate team.

**Candidate should have;**
- Excellent spoken and written English ability
- Good communication skills
- Previous work experience as English Translator is desirable

**Other Conditions**
- Working hours 9.00 a.m.to 5.00 p.m. on week days.
- Salary Negotiable
- Apply with C.V A/O, Administrative Officer, 15, Kachcheri Nallur Road, Jaffna. on or before 11.02.2005.

**President**
Association for Health and Counselling.
(சி-40745) (42-11-45-26)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
த.லோகராஜா
அவர்களின் அன்புத் தாயார்
**அமரர்**
**ருக்மணிதேவி தங்கரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்.
(சி-40746)(26-11-45) யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை.

## மரண அறிவித்தல்

### இராயப்பு செல்வராசா நேசம்மா (பூமணி)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட நேசம்மா (பூமணி) 29.01.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மை வெலிச் சோர் - மரியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வி யும் காலஞ்சென்ற இராயப்பு செல்வராசாவின் அன்பு மனைவியும் செல்வராசா, லூயிஸ் அல் வின், அந்தோனியாப்பிள்ளை, பங்கிராஸ் ஆகி யோரின் சகோதரியும் மனோகரன், யேசுதாஸ் (லண்டன்), வேவி (நோர்வே), பிறிம் றோஸ், பற்றிக் (இத்தாலி), ஜெயக்குமார், அன்ரனி யேசுதாஸ் (நோர்வே), யேசுநேசன் (நேசன் ரேடர்ஸ் வஸ்ரியன் சந்தி - யாழ்.) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரிஜடா, லூட்ஸ் லில்லிகாட் (லண்டன்), ஜெயசிங்கம் (நோர்வே), கிறிஸ்துராசா, சீலி (இத்தாலி), ஜெனிற்ரா, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியாரும் மதி, சுமதி, ரஜினி, டன்சன், நிலாணி யேசு ரஞ்சன், யேசுராஜன், ஜெஸ்ணன், தர்சினி, றொபின்சன், தர்மினி, டினோஜா, ஜெனேஸ்குமார், ஜெபோரா, ஆஷா, நிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டிறுஸ், டிறுஸா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (03.02.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலியுடன் மாதகல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
மாதகல்.

தகவல்:
யேசுநேசம்
(மகன்).

(41594)(26-11-45)

## VACANCY FOR THE POST OF PROJECT ENGINEER

Applications are invited for a Post of Project Engineer to execute and supervise the Sub Projects are being implemented by DPMU, NECORD, Jaffna, to assist District Deputy Project Director in the responsibility for producing the Projects all Physical civil works outputs in required quality and time frames.

| | |
|---|---|
| ***Qualification*** | - B.Sc. Civil Engineering with 5 years experience in civil works. |
| ***Age limit*** | - below 55 years |
| ***Salary*** | - As per T-5-1-2 of Public Administration Circular No. 2/97 (iii) dated 12.11.1997 and as amended by Public Administration Circular No. 9/2004 dated 27.12.2004 plus 50% of the salary as allowance. |

Candidates are requested to prepare the application including Educational, Professional qualification, Date of Birth, Previous Employment Particulars and Past Experience.

The application should be sent under registered cover to reach the **Government Agent, NECORD, Kachcheri, Jaffna** on or before 14.02.2005. The name of the post applied should be written on the left hand corner of the registered cover. The applicants who are in government service should send their applications through their Secretary/ Head of Department with a recommendation regarding release if the applicants are selected for the post.

K.GANESH,
*Government Agent, Jaffna.*
(சி40747)

# புரதம் நிறைந்த சோயா அவரை அனைவருக்கும் உகந்தது



இன்று இலங்கையில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு, அத்துடன் விலை ஏற்றமும் காணப்படுகிறது. பசுப்பாலும் பற்றாக்குறை பசுப்பாலுக்கும் பால் மா வகைகளுக்கும் கூட உச்சவிலை. இவற்றைச் சமாளிக்க முடியாமல் அவதிப்படும் ஏழை மக்களுக்கும் நடுத்தரவர்க்கத்தினருக்கும் வரப்பிரசாதமாகக் கைகொடுத்து உதவக்கூடியது சோயா அவரையாகும்.

சோயா அவரை இரண்டாம் உலக மகா யுத்தத்துடன் இலங்கை மக்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்ட ஒன்று. கைத்தொழிலாளர்களுக்கும், கால்நடைவளர்ப்போருக்கும் விவசாயிகளுக்கும் பெரியளவில் உதவிவரும் சோயா அவரை மனித உணவாகவும் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

எமது நாளாந்த உணவில் புரதச்சத்து மிக இன்றியமையாத ஒன்று. புரதக்குறைபாடானது தசைநார் வளர்ச்சியினைத் தடைப்படுத்தி, உடல் வளர்ச்சியைக் குன்றவைக்கும். சமச்சீரற்ற உணவால் ஏற்படும் பல நோய்களையும் இது உண்டுபண்ணுகின்றது. மனிதர்களுடைய ஈரல் பழுதடைவதற்குப் பிராதான காரணம் போதியளவு புரதச்சத்துக் கிடைக்காமையேயாகும்.

ஆகவே, நாம் எமது உணவில் வேண்டிய அளவில் புரதச்சத்துக் கொண்ட உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்வது அவசியமானது.

புரதச் சத்தினை நாங்கள் இரண்டு வழிகளில் பெற்றுக்கொள்ளலாம். மிருகங்களில் இருந்து பெற்றுக்கொள்வது ஒன்று. தாவரங்களில் இருந்து பெற்றுக்கொள்வது மற்றொன்று.

மிருகங்களில் இருந்து பெறப்படும் பால், இறைச்சி, முட்டை என்பவை புரதம் நிறைந்தவை. இவற்றின் விலை உயர்வு காரணமாகச் சாதாரண மக்கள் இவற்றைத் தமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்வது பிரச்சினையான காரியமாகவே உள்ளது. ஆனால், இவர்கள் குறைந்த செலவில் தரமான புரதத்தினைத் தாவரப்புரதத்தின் மூலம் மிருகப் புரதத்திற்குச் சமனான வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று உலகின் பல பாகங்களிலும் சோயா அவரை மிகப் பிரபல்யமடைந்து வருகின்றது. அதற்கு முக்கிய காரணம் சோயா அவரையில் காணப்படும் மிக உயர்ந்த வீத புரதமேயாகும். சோயாவைக் குறைந்த விலையில் பெற்று எமது நாளாந்த உணவில் சேர்த்துத் தேவையான அளவு புரதச் சத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

சோயாவில் உள்ள புரதத்தின் அளவிலும் பார்க்க அதன்தரம் முக்கியத்துவம் வாய்ந்தது. புரதத்தின் தரமானது அமினோ அமிலங்களின் சேர்க்கை, போஷணைக் கெதிரிடையான காரணிகள், ஜீரணமாதல், முழு உணவின் சேர்க்கை ஆகிய காரணங்களில் தங்கி உள்ளது.

சோயா அவரையில் உள்ள புரதம் விலங்குப் புரதத்தை ஒத்ததாகவும் முக்கிய அமினோ அமிலங்களின் கலவையில் கந்தகம் உள்ளவையைவிட விலங்குப்புரதத்தில் உள்ள அமினோ அமிலங்கள் யாவற்றையும் கொண்டதாகவும் உள்ளது. அத்துடன், எமது உணவில் உள்ள தானியங்கள் முக்கிய அமினோ அமிலங்களை சமச்சீர் செய்கின்றது. இதனால் எமது உணவின் உயிரியல் பெறுமானமும் உயர்த்தப்படுகிறது.

சோயா அவரையில் உள்ள புரதத்தின் சராசரி அளவு 40சதவீதமாகும். எண்ணெய்யின் அளவு 20 சதவீதமாகும். இவற்றைவிட கனியுப்புக்கள், உப்புக்கள், விற்றமின்கள் எனப் பல வகையான சத்துக்களை நிறையக் கொண்டிருக்கின்றது.

சோயா அவரையானது குளிர்நீரின் சேர்க்கையால் விரும்பத்தகாத மணம் ஒன்றை உருவாக்குகின்றது. இது "அவரைச்சுவை" (BEANYTASTE) என அழைக்கப்படுகின்றது. இச்சுவையானது சோயா அவரையில் இயற்கையாக இருப்பதொன்றல்ல. சோயாவில் காணப்படும் அவரைச்சுவை மற்றும் அதனைச் சமைக்க எடுக்கும் நேரம் போன்ற குறைபாடுகள எமது வீட்டுப்பெண்களைச் சோயா உணவு தயாரிப்பதில் பின் நிற்கவைக்கின்றன. எனினும் உரிய முறையில் சோயாவைப் பதப்படுத்தித் தயாரிக்கப்படும் சோயா உணவுகள் சிறந்த சுவையும், அதிக போஷணையும் பெறுமதியும் உடையவையாக இருக்கும்.




கைத்தொழிலாளர்களால் சோயா எண்ணெய் தயாரிக்க சோயா அவரை பயன்படுத்தப்படுகிறது. சோயா எண்ணெய் மிக்க பெறுமதி வாய்ந்தது. இவ்வெண்ணெய்யின் மூலம் சவர்க்காரம், வாணிஸ், பெயின்ற் போன்ற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

கால் நடைகளுக்கு உணவாகவும், பிண்ணாக்காக்கி வழங்கவும் பயன்படுகிறது. வயல் நிலத்தின் வளத்தை அதிகரிக்கவும் சோயா உபயோகப்படுகின்றது.

சிறுவர்களுக்கான போஷாக்கு மா, மற்றும் சோஸ் (SAUCE), களி, பால், தயிர் போன்றவற்றைத் தயாரிக்கவும் காய்கறி 'சூப்' தயாரிக்கவும் உணவுப் பதார்த்தங்களான வடை, தோசை, அல்வா போன்ற பொருள்கள் தயாரிக்கவும் சோயா பயன்படுத்தப்படுகிறது.

### சோயா மா தயாரித்தல்

நல்ல சோயா விதை ஒரு கிலோவுடன் ஒரு லீட்டர் தண்ணீர் (5 கோப்பை) சேர்த்துக் கொதிக்க வைக்கவேண்டும். கொதிக்குமபோது சிறிது அப்பச்சோடா சேர்த்து ஒருமணிநேரம் அவியவிடவேண்டும். பின்னர் இறக்கி அதனைக் கைகளால் பிசைந்து, தோலை அப்புறப்படுத்த வேண்டும். தோல் நீக்கிய சோயாவை நன்றாக உலரவிடவேண்டும். உலர்ந்த விதைகளை சிறு இயந்திரங்கள் மூலம் அரைத்து அவற்றை அரித்தெடுத்து மாவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதனைவிட, சோயா அவரை மணிகளை நெருப்பில் வறுத்தும் அரைத்தும் மாவாக்கலாம். மணிகளை நெருப்பில் வறுக்கும்போது விதைகளின் தோல் வெடிக்கும். வெடித்த தோல்களினூடாக மெல்லிய கபிலநிறம் தோன்றும். அப்போது அவற்றை இறக்கிச் சூடாக உள்ளபோதே உடைத்துத் தோல்களைப் பிடைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு பெறப்பட்ட சோயா மணிகளை அரைதது, அரித்து மாவாக்கிக் கொள்ளமுடியும்.

இவ்வாறு பெறப்படும் சோயா மா மூன்று மாதங்கள் வரை கெட்டுப் போகாமல் இருக்கும். கோதுமை, குரக்கன், அரிசிமா என்பனவற்றைக்கொண்டு தயாரிக்கும் எல்லா உணவுகளிலும் மூன்றில் ஒரு பங்கு சோயா மா சேர்த்துக்கொண்டால் உணவின் சுவையையும் வெளித்தோற்றத்தையும் உணவின் தரத்தையும் 30 சதவீதத்தால் உயர்த்திக்கொள்ளமுடியும். பிட்டு, இடியப்பம் போன்ற உணவுகளை இவ்வாறு தயாரிப்பதன் மூலம் சுவையுடன் கூடிய உயர்ந்த போஷணை உணவாக அவை அமையும். வறுத்த சோயா மாவையும் உழுந்தையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பப்படம், தோசை, வடை போன்றன மிகச் சுவையாக இருக்கும்.

### அவரைப்பால் தயாரித்தல்

அரைக்கிலோ அவரை விதைகளை 2000 மில்லிலீற்றர் நீரில் 18 மணி நேரம் ஊறவிட வேண்டும். பின்னர் அவற்றைக் கைகளால் கசக்கித் தோலை அகற்றவேண்டும். இந்த விதைகளை உரலிலோ, கிறைண்டரிலோ இடித்து அரைத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு ஆயிரம் மில்லிலீற்றர் நீரைவிட்டுப் பிசைந்து ஒரு வெள்ளைத் துணியில் இட்டுப் பிழிந்து வடித்தெடுக்க வேண்டும். துணியில் - வடியில் தங்கி உள்ள சக்கையைத் திரும்பவும் இடித்து அதே அளவு நீர் விட்டுக் கசக்கிப் பிழிந்து வடித்தெடுக்கவும். மூன்று தடவைகள் இவ்வாறு பிழிந்து எடுக்கலாம். இதன்மூலம் மூவாயிரம் மில்லிலீற்றர் சோயா அவரைப் பாலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**வி.பி.சர்மா**

இவ்வாறு பெறப்பட்ட பாலைப் பத்து நிமிடம் வரைக் கொதிக்க விட்டு, எமது விருப்பத்திற்கேற்ப சீனி, வனிலா, கொக்கோ என்பவற்றைச் சேர்த்துப் பசுப்பாலைப் போன்று அருந்தலாம். இப்பாலைக் கொண்டு தயிரும் தயாரித்துக் கொள்ளலாம்.

போஷாக்கும் புரதமும் நிறைந்த சோயா ஏழை மக்களினதும், சிறுவர்களினதும் மட்டுமல்ல, சகலரதும் உயிர் காக்கும் நண்பனாக விளங்குகிறது. ★

# அறுவடையின் பின்பு விளைச்சலை எவ்வாறு பேணுவது?

விவசாயத்தில் நல்ல விளைச்சலைப் பெற்றவுடன் மாத்திரம் விவசாயின் சகல பிரச்சினைகளும் தீர்ந்துபோவதில்லை. விளைபொருள்கள் விற்பனையாகவும் வேண்டும். வர்த்தகச் சந்தைகளில் எமது விளை பொருள்களுக்குக் கிராக்கியை ஏற்படுத்தவேண்டும். அதற்கு எமது உற்பதியின் தரத்தைப் பேணுவதில் கவனம் செலுத்தவேண்டும். உற்பத்திப் பொருள்களின் தரத்தை உயர்த்துவதற்கு அறுவடை மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் கவனம் செலுத்தவேண்டும்.

நெற்செய்கையைப் பொறுத்தவரையில் அச செயற்பாடுகளைப் பலவகைப்படுத்தலாம், அறுவடையைப்பெறுதல், சூடுமிதித்தல், சுத்தம்செய்தல், உலரவிடுதல், சேமித்துவைத்தல் என்பன அவையாகும்.

அறுவடையின் பின்னர் உள்ள நடைமுறைகள் முறையாக மேற்கொள்ளப்படாமையால் நாம் பெரும் பாதிப்பிற்குள்ளாக வேண்டியுள்ளது. இந்த நடைமுறைகளில் தகுந்த தொழில்நுட்பங்களைக் கையாளத் தவறுவதால் எமது நெல உற்பத்தியில் பெரும் சேதமும் அதன் குணநலன்களில் குறைபாடுகளும் ஏற்பட்டு அவை வீணாகி விடுகின்றன. அறுவடையின் பின் முறையான தொழில் நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக அறுவடையில் பத்துவீதம் பிரயோசனப்படுத்தப்படாது வீணாகி விடுகின்றது. நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் பெரும்போக நெற்செய்கையின் போது இவ்வாறு சுமார் 10 லட்சம் புசல் நெல் இழக்கப்படுகிறது. உண்மையில் இது பெரும் இழப்பல்லவா? இவை பற்றிய தெளிவைப் பெறுவதன் மூலம் இவ்விழப்பைக் குறைத்துக்கொள்ளமுடியும்.

மறுபக்கத்தை நோக்கும் போது முறையான தொழில்நுட்பம் மேற்கொள்ளப்படாது, சந்தைப் படுத்தப்படும் விவசாய விளை பொருள்களுக்குச் சந்தையில் குறைந்த பெறுமதியையே எதிர்பார்க்க முடியும். அது மாத்திரமின்றி அதற்குள்ள சந்தைவாய்ப்பும் குறைந்துவிடும்.

சில வேளைகளில் அவற்றின் குணநலன்களும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். தரமான அரிசியைச் சந்தைப்படுத்தவேண்டுமாயின், அறுவடையின் பின்னர், சிறப்பான தொழில்நுட்பங்கள் கையாளப்படுவது மிக முக்கியமானதாகும். அதுபோன்றே எச்சந்தர்ப்பத்தில் விளைபொருள்கள் சந்தைப்படுத்தப்படல் வேண்டுமென்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். உதாரணமாக நெல் அறுவடைக் காலங்களில் நெல்லின் விலை குறைவாகவே இருக்கும். சில மாதங்களின் பின்னர் சந்தைப்படுத்துவதால் அதிக விலைக்கு விற்கமுடியும். அவ்வாறாயின் அதைச் சேமித்து வைப்பது எவ்வாறு?

உடனடியாக விவசாயிகள் நெல்லை விற்காதபோது, சந்தையில் அரிசியை எதிர்பார்க்க முடியுமா? ஆனால் அவ்வாறு செய்வதால் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். உதாரணமாக நெல் அறுவடைக் காலங்களில் ஒருகிலோ நெல்லின் விலை 10-13ரூபா வரையிலேயே இருக்கும். ஆனால், டிசெம்பர் மாதத்தில் அது சுமார் 17-18 ரூபாவாக இருக்கும். இதனால் விஞ்ஞான முறையில் நெல்லை பக்குவமாகச் சேமித்து வைப்பதைப் பற்றி விவசாயிகள் அறிந்திருப்பது நல்லதல்லவா?

நெல் அறுவடையின் பின்னர் தற்பொழுது கையாளப்படும் நடைமுறைகளில் காணப்படும் குறைபாடுகளைப் பற்றி நாம் இங்கு நோக்குவோம்.

அறுவடையில் உள்ள குறைபாடுகளில் முதலாவது சரியான பருவத்தில் நெல் அறுவடை செய்யப்படாமையாகும். குறிப்பிட்ட பருவத்துக்கு முன்னர் அறுவடை செய்யப்படுவதால் நெற்சப்பிகளே பெருமளவில் இருக்கும். தரமான விதை நெல் அதிகமாக இருக்காது. விளைச்சல் குறையும். நன்கு முற்றாத, தரமற்ற நெல்லை விதைநெல்லுக்காகச் சேமிக்கும்போது பூச்சித்தாக்கமும் பங்கசுத் தாக்கமும் அதிகமாக இருக்கும்.

சூடடிப்பதில் நாடு முழுவதிலும் மூன்று வகையான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

மாடுகளைக் கொண்டு சூடடித்தல்,

டிராக்டர் மூலம் சூடடித்தல்,

நெல்லை வேறாக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சூடடித்தல் என்பனவாகும்.

மாடுகளைக் கொண்டும், டிராக்டர் மூலமும் மேற்கொள்ளப்படும் சூடடித்தல் முறையால் பெருமளவில் நெல் வீணாகக்கூடும்.

மாடுகளைக் கொண்டு சூடுமிதிப்பதால் காலம் விரயமாகுவதோடு, நெற்கதிர்களில் இருந்து நெல் மணிகளை முழுமையாக வேறாககாமையும் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்கும். டிராக்டர் மூலம் சூடடிப்பதால் நெல்மணிகளில் வெடிப்புகள் ஏற்படும். அதனால் அரிசியில் குறுணல் அதிகமாகக் காணப்படும். இவற்றைத் தவிர்க்க நெல்லடிக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதே பயன்மிக்க நடைமுறையாகும். அதன் மூலம் முழுமையான விளைச்சலையும் பெறமுடியும். டிராக்டர் மூலம் சூடடிப்பதால் அறுவடையில் மூன்று வீதமான இழப்பு ஏற்படுவதாக விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் கணிப்பீடுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

நெல்லடிக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுமாயின் மழை காலங்களிலும் அறுவடையை மேற்கொள்ள முடியும். உற்பத்திச் செலவும் குறையும் கூலியாள்களில் எண்ணிக்கையும் குறையும் இரு செயற்பாடுகள் கொண்ட நெல் அறுவடை இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிக பலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காற்றைப் பயன்படுத்தி நெல்லைத் தூற்றிச் சுத்தப்படுத்தும் முறையே தற்போது கையாளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மிகவும் இலேசான பாரம்குறைந்த கழிவுகள் மாத்திரமே வெளியேற்றப்படுகின்றன. இது பயனுள்ள முறையலல.

இன்று நெற் பயிரை அறுவடை செய்து காயவிட்டுச் சூடடிக்கும் முறையே கையாளப்பட்டு வருகிறது. ஆனால்,வேறாக்கிய நெல்லைக் காயவைத்துப் பெறுவதே பயனுள்ள முறையாகும். மேமிக்கப்படுவதற்கு முன்னர் நெல்லின் ஈரத்தன்மை 14 வீதமாகக் குறைக்கப்படல் வேண்டும். நெல் மாத்திரமன்றி, சோளம், குரக்கன், இறுங்கு, தினை போன்றவற்றின் ஈரத்தன்மையும் 14 வீதமாக இருக்கவேண்டும். பயறு, கௌபி, உழுந்து போன்ற சிறு தானிய வகைகளாயின் ஈரத்தன்மை 10வீதமாக இருக்கவேண்டும். எண்ணெய்த் தன்மையுள்ள நிலக்கடலை, எள்ளு போன்றவற்றின் ஈரத்தன்மை 8 வீதமாக இருக்கவேண்டும்.

இவ்வாறு நன்றாகக் காயவைப்பதன் மூலம் பூஞ்சணம் ஏற்படுவதை முழுமையாகத் தவிர்க்க முடியும். அதிக ஈரத்தன்மை பூச்சித்தாக்கத்துக்கு ஏதுவாகும். ஈரலிப்பான நெல்லைப் பாதுகாத்து வைப்பதால் அவை வெதும்பி விடுகின்றன. அதன் காரணமாக பழுப்பு நிறமாக மாற்றமடையவும் கூடும்.

எமது சேமிப்பு முறைகளிலும் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. முறையான நுட்பத்துடன் சேமித்து வைப்போமாயின், சேமிப்பின் போது ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

நெல் சேமித்து வைக்கப்படும் போது நிலதத்துக்கும் நெல்லுக்கும் தொடர்பில்லாதவகையில் சேமித்து வைக்கப்படல் வேண்டும்.எமது பாரம்பரிய முறைகளைக் கையாள்வதன் மூலம், உயர்ந்த தரம் கொண்ட நெற்களஞ்சியத்தை உருவாக்கிக் கொள்ளமுடியும். எமது முன்னோர் பயன்படுத்திய மண் கொண்டு உருவாக்கப்பட்ட "நெற்குதிர்"கள் மிகச் சிறந்த களஞ்சியங்களாகும். அது கனத்த சுவரைக் கொண்ட வட்டமான அமைப்பைக் கொண்டதாகும். நிலத்தோடு தொடர்பற்ற வகையில் நிலமட்டத்தை விட உயரமாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பான களஞ்சியமாக இது இருக்கும். முறையாக காயவைக்கப்பட்ட நெல்லாயின் ஒரு வருடம் வரையில் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

சாக்குகள் பலவற்றை இணைத்து உருவாக்கப்படும் களஞ்சியமொன்றைக் கூட விவசாயிகள் தமது வீட்டினுள் அமைத்துக் கொள்ள முடியும். இதுவும் நல்லதொரு களஞ்சியமே. பல சாக்குகளில் களஞ்சியப்படுத்தும் பல மடங்கு நெல்லை ஒரு சேர இதில் களஞ்சியப் படுத்தி வைக்கமுடியும்.

சிறு தானியங்களைக் களஞ்சியப்படுத்தும் போது, சுட்ட உமியை அதனுடன் கலந்து இடுவதால், பூச்சித் தாக்கத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும். பாவனைக்குத் தேவைப்படும்போது சுளகினால் புடைத்துப் பயன்படுத்த முடியும்.

அவற்றுக்கு கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படுவது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் செலவும் அதிகரிக்கக் கூடும். அதைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இத்தகைய முறைகள் உகந்தனவாகும்.

**சரா**

நெல் அவித்தலும் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். நெல்லை ஊறவிட்டு அவிப்பதாயின் 24 மணித்தியாலங்களுக்கு மேல் ஊறவிடக்கூடாது. அதற்கு மேற்படின் அரிசியின் குணநலன்கள் அற்றுப் போகக்கூடும்.

1980 ஆம் ஆண்டளவில், அறுவடையின் பின்னரான செயற்பாடுகள் தொடர்பாக விவசாய நிறுவனம் அறிமுகப்படுத்திய நெல் அவிக்கும் நவீன முறையைக் கொண்ட சாதனத்தைப் பயன்படுத்தி இதை மேற்கொள்ளலாம். நீராவியின் மூலம் .நெல் அவிக்கும் அச்சாதனத்தின் மூலம் சுமார் 15 நிமிடங்களில் நெல்லை அவித்தெடுக்க முடியும். அது மிகுந்த செயல்திறன் மிக்கதாகும். ★

## ஒரு வருட நினைவுகளுடன்...



தோற்றம் 15 ~ 04 ~ 1943 | மறைவு 02 ~ 02 ~ 2004

### அமரர் பொன்னையா தர்மலிங்கம் (லண்டன்)

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (02.02.2005) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

என்றும் உங்கள் நினைவுடன் வாடும்:
மனைவி - செலஸ்ரினா
(மணோன்மணி)
மற்றும் குடும்பத்தினர்.
T.P: 020 84238860

இல.01, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி. (41592)

## பாவலனின் நினைவுக்கல் நேற்றுமுன்தினம் திரைநீக்கம்

கிளிநொச்சி,பெப்.2

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் போது ஒட்டுசுட்டான் பகுதியில் வீரச்சாவடைந்த வீர வேங்கை பாவலன் என்ற போராளியின் நினைவுக் கல் திரைநீக்கம் நேற்றுமுன்தினம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது.

அவரின் திருவுருவப்படம் விசுவமடுவில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் நேற்று முன்தினம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் காலை அங்கிருந்து அலங் கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு, விசு வமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்ச லியின் பின் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ரூபன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அவரது தாயார் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை வவு னியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல்,விசுவமடுப் பிரதேச மாவீரர் பணி மனைப் பொறுப்பாளா கீதாராம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து இம் மாவீரரது நினைவுக் கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

(3-12)

### எச்சரிக்கை மையத்தை இலங்கையில் அமைக்க நடவடிக்கை

சுனாமி முன்னெச் சரிக்கை வழங்கும் மையத்தை இலங்கை யில் நிறுவுவதற்கான யோசனைகளை அடங்கிய அமைச்சர வைப் பத்திரம் விரை வில் சமர்ப்பிக்கப் படும் என சுற்றாடல், இயற்கைவள அமைச் சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இவ் வாறான கட்டமைப்பை நிறுவுவது தொடர்பாக கடந்த 28,29 ஆம் திகதி களில் சர்வதேச சமூ கத்துடன் தாய்லாந் தில் விரிவாக கலந்து ரையாடப்பட்டிருந்தது.

(க-3)

## யா/பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசாலை

### வைரவிழா மலர் நூல் வெளியீடு

மேற்படி எமது பாடசாலையின் அறுபதாவது ஆண்டு நிறைவை யிட்டு மலர் ஒன்றை வெளியீடு செய்ய உத்தேசித்துள்ளதால் பாடசாலை தொடர்பான தகவல்கள், வரலாறுகள் தெரிந்தோர் அல்லது அவ்வாறான செய்திகள், புகைப்படங்கள் , ஆவணங் களை வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள் வதுடன், அவ்வாறு வழங்கப்படும் ஆவணங்கள் யாவும் திருப்பித் தரப்படும் என்பதனையும் தெரிவிக்கவிரும்புகின்றோம். தகவல் தர விரும்புவோர் மற்றும் பாடசாலை அபிவிருத்தியில் பங்கெடுக்க விரும்பும் பழைய மாணவர்கள், நல்விரும்பிகள் அனைவரையும் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வைரவிழாக்குழு,
யா/பாலாவோடை இ.த.க. பாடசாலை,
காரைநகர்.
(C/40705)

## நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1916 - 12 - 14 | உதிர்வு 2003 - 01 - 25

அமரர் A.R.சிவகுருநாதன்



மலர்வு 1924 - 08 - 09 | உதிர்வு 1992 - 09 - 06

திருமதி தவமணி சிவகுருநாதன்

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
மறாது உங்கள் அன்பு உள்ளங்கள்
நிஜத்தில் நீங்கள் எம்முடன் இன்றில்லை
ஆனால் நினைவில் தினமும் எம்முடன் வாழ்கின்றீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழ்கின்ற
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

102,அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 20 ~ 04 ~ 1946 | மறைவு 27 ~ 01 ~ 2000

### அமரர் சின்னையா பாஸ்கரலிங்கம்

(தபாலதிபர்- வவுனியா)

திதி: 02.02.2005

அருமையெங்கள் குலக்குடிக்கோர்
அருஞ்சுடராய் இலங்கி நின்றோய்!
நிருவமிது அளப்பாக நிழலாக மறைந்தீர்கள்
நித்தநித்தம் தங்களுக்கு நிகழ்த்துவமே பூஜைகள்!

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி. (41572)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13.02.1927 | உதிர்வு 03.01.2005

எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று (02.02.2005) புதன்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## அமரர் தம்பு கந்தையா

-குடும்பத்தினர்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (41577)

# நவீன ஓவியம் — ஒரு கண்ணோட்டம்

ஓவியக்கலை வரலாற்றில் நவீன ஓவியப் பாணி ஒரு புதிய அத்தியாயமாகும். 20ஆம் நூற்றாண்டில் யதார்த்த இயல்பு நெறிவாத ஓவியப் பாரம்பரியத்தை உடைத்தெறிந்து கொண்டு தோற்றம் பெற்றதே நவீன ஓவியப் பாரம்பரியமாகும்.



19ஆம் நூற்றாண்டில் மனிதன் புதிய புதிய அத்தியாயங்களைத் தோற்றுவிக்கின்றான். "பறவையை கண்டான் விமானம் படைத்தான்" என்ற பாடலடியைப் போல மனித மூளையின் விரிவான சிந்தனையில் பல தொழில்நுட்பக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று தான் புகைப்படக்கருவி **(Camera).**

இந்தக் கமராவின் கண்டுபிடிப்பால் ஓவியர்கள் புதிய பாதைக்கு தள்ளப்பட்டார்கள். அதாவது புற உலகைப் பிரதிபண்ணி வரைதலிலும் , பிரதியுரு வரைவதிலும் ஈடுபட்டிருந்த ஓவியர்களின் மத்தியில் இவ்வேலைகளை கமரா வெற்றிகரமாகவும், உடனடியாகவும் செய்து முடித்தது. இந்த வேளையில் தான் ஓவியர்கள் மத்தியில் ஒரு புதிய உத்வேகம் பிறந்தது.

இந்தக் கமரா சிறைப்பிடிக்க முடியாத அம்சமாக ஓவியங்கள் படைக்கப்பட வேண்டும், என கருதினர். இதன் விளைவாக தோன்றியதே நவீன ஓவியங்களாகும்.

## கலைச்சுடர்

தயாரிப்பு: தீபா

புலக்காட்சிகளை அப்படியேவரையாது அது ஏற்படுத்தும் மனப்பதிவை ஓவியமாக வரைதல்



என்ற மனப்பதிவு கோட்பாட்டோடு (Impressionism) ஆரம்பமாகும் நவீன ஓவியப் பாரம்பரியத்தில் பின்னர் பல்வேறு கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. நவீன ஓவியப் பாரம்பரியம் கலைஞன் தன் வழக்க முறையாகப் பெறும் அனுபவத்தை அவனது யதார்த்த அல்லது கற்பனையால் உணரப்பட்ட கட்புல அலகுகள் வாயிலாக அழகியல் அடிப்படைகளுக்கு அமைய ஸ்தூலமான எண்ணக் குறியீட்ர்க சேர்த்தல் மூலம் ஒரு



ஒழுங்கமைப்புடன் கூடிய நிச்சயத் தன்மையுடைய ஒரு முழுமையான காட்சியமைப்பாய் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

ஐரோப்பாவில் பிறப்பெடுத்த நவீன ஓவியப் பாரம்பரியம் இலங்கை போன்ற தெனகிழக்காசிய நாடுகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. இலங்கையில் "43" குழுவின் தோற்றத்தோடு நவீன ஓவியப் பாரம்பரியம் பரவலடையத் தொடங்கியது. இந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்திலும் ஒரு நவீன ஓவியப் பாரம்பரியம் துளிர்விட்டது.

யாழ்ப்பாண நவீன ஓவியர்கள் மகுடத்தை தரிக்கக்கூடியவர்கள் சிலரே நம்மிடையே தோன்றியுள்ளார்கள்.

வினைத்திறனும் படைப்பாற்றலும் கலந்ததொரு முயற்சியே ஓவிய உருவாக்கமாகும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து படைக்கப்பட்ட பரிசோதனை முயற்சிகளான ஓவியங்களை கலை ஆர்வலர்கள் நவீன ஓவியம் (Modern Art) என்று அழைக்கின்றனர். எனி





னும் இத்தகைய ஓவியப்பாணி கலை வரலாற்றில முற்றிலும் புதியதல்ல, மரபு வழியான ஓவியங்களில் ஒரு சில அம்சங்களை விருத்தி செய்வதன் மூலமே நவீன ஓவியப்பாணி பெறப்பட்டது. நவீன ஓவியரான பிக்காசோவின் ஓவியங்கள் கிரேக்க குடுவைச் சித்திரங்கள், ஸ்பெயின் நாட்டின் ஓவிய மரபு என்பனவற்றின் பெரும் செல்வாக்கிற்கு உட்பட்டன.

இதைப்போல நவீன ஓவியர்கள் எனப்படுபவர்கள் திடீரென தோன்றியவர்கள் அல்லர். முன்னைய யதார்த்த வாதத்தில் உள்ளதை உள்ளவாறே திறம்பட வரையும் திறமையான ஓவியர்களே நவீன ஓவியச் சிந்தனையில் கவரப்பட்டு நவீன ஓவியப் பரிசோதனைகளில் ஈடுபட்டனர். எனவே, அவர்கள் ஒரு சிறந்த ஓவியக் கலைஞர்களாவர். அண்மைக் காலத்தில் வாழ்ந்த மேலைத்தேய சிறந்த நவீன ஓவியரான பிக்காசோவும் ஆரம்ப காலத்தில் சிறந்த யதார்த்த ஓவியராக திகழ்ந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுவைஞரிடத்தே வாதிப்பிரதி வாதங்களைத் தோற்றுவித்து சுவைஞர்கள் ஓவியத்தை ரசிப்பதுடன் நின்றுவிடாது ரசனைக்கு அப்பால் கலைஞனின் கருத்தையோ அன்றி ஓவியத்தின் கருத்தையும் தேடிக்கண்டுபிடிப்பதை நவீன ஓவியம் வேண்டி நிற்கின்றது.



யாழ்ப்பாணத்து நவீன ஓவியப் பாரம்பரியத்தை வளர்த்த, வளர்த்து எடுத்துக்கொண்டிருப்பவர்கள் வரிசையில் மாற்கு, கே.கிருஷ்ண ராஜா, ரமணி, அருந்ததி போன்றவர்கள் குறிப்

**து.துஷ்யந்தன்**
**ஆசிரியர்.**

பிடத்தக்கவர்கள். இவர்களைவிட இலைமறைகாயாக இருக்கும் இன்னும் பல ஓவியர்களும் வாழ்ந்து வருகின்றார்கள். அவ் உண்மைக் கலைஞர்களும் அவர்களுடைய படைப்புக்களும் வெளிக் கொண்டுவரப்படவேண்டும். ★



2004ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் கரைச்சிக் கோட்டமட்டத்திலும் கிளிநொச்சி வலய, மாவட்ட மட்டங்களிலும் முதலாம் இடத்தினைப் பெற்று வடக்குக் கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி ம.வி. மாணவர்களின் "புதியதோர் உலகம் படைப்போம்" எனும் நாடகத்தின் ஒருகாட்சி. (கு-405)



யாழ். வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்ட முன்பள்ளிகளுக்கான ஒளிவிழா வை.எம்.சீ.ஏ.மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற காந்தி பாலர் பாடசாலை மாணவர்களின் கிராமிய நடனத்தைப் படத்தில் காணலாம். (10-190)



அண்மையில் புனித மார்ட்டின் குருமடத்தில் இடம்பெற்ற புனித மார்ட்டின் திருநாள் நிகழ்வுகளின் போது குருமட மாணவர்கள் வாத்தியங்கள் இசைத்துப் பாடல் பாடுவதைப் படத்தில் காணலாம்.





வரணி தென்னிந்திய திருச்சபையின் 22ஆவது ஒளிவிழா நிகழ்வில் இடம்பெற்ற 'பாலன் பிறப்பு' நாடகத்தில் நிலைய மாணவர்கள் தோன்றும் காட்சியே இது. (கு-170)



மாரீசன் கூடல் றோ.க.த.க.பாடசாலையில் ஒளிவிழா நடைபெற்றபோது நத்தார் பப்பாவுடன் இணைந்து மாணவர்கள் நடனம் ஆடுவதைப் படத்தில் காணலாம். *(படம்:-மாதகல் செய்தியாளர்)*

## கப்பம் கொடுக்காததால் குடும்பஸ்தர் கொலை

காலி, அங்குணுகொலபாலஸ்ஸ பகுதியில குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாதோரால் கத்தியால் குத்திச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான டபிள்யூ சோமபாலா (வயது 47) என்பவரே இக்கொடூரத்திற்குப் பலியானவராவார்.

இப்பரிதாபச் சம்பவம் அவரின் வீட்டில் வைத்தே கடந்த சனியன்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவரிடம் கப்பம் கேட்டு இனம் தெரியாதோர் இவரைத் தொந்தரவு கொடுத்து வந்துள்ளனர். இவர் அதற்கு மசியவில்லை. அதனாலேயே இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கொலையுண்டவரின் மனைவி தயாவதி பொலஸாரிடம் தெரிவித்தார்.

அங்குணுகொலபாலஸ்ஸ பொலீஸார் விசாரணை மேற்கொள்கின்றனர். (க-3)

# கிழக்கில் கடற்றொழில் மீண்டும் ஆரம்பம் முழுமையாகச் சீரடையப் பல மாதங்கள் செல்லும்

காரைதீவு,பெப்.2

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஒரு மாத காலத்தின் பின்பு கிழக்கில் கடல் மீன் பிடித் தொழில் மெல்லமெல்ல ஆரம்பமாகிவருகிறது.

ஒலுவில், பாலமுனை, அக்கரைப்பற்றுப் பகுதிகளில் தினமும் கடலுக்குச் சென்று பாரைக் குட்டி, சீலா போன்ற மீன்களைப் பிடித்து வருகின்றனர். அவை கரையோரப் பிரதேச மக்களால் உண்ணப்பட்டும் வருகின்றன.

கலமுனைப் பிராந்தியத்தில் சுனாமி தாக்கி 40ஆம் நாள் சமய நிகழ்வின் பின்னர் முஸ்லிம் மீனவர்கள் படிப்படியாக மீன்பிடித்துறைக்குத் திரும்புவரென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் தோணி, வலை நிர்மூலமாகியுள்ளன.

குறிப்பாகக் கடற்கலங்கள், அதற்கான உபகரணங்கள் இல்லாமையும் தொழில் தாமதமடைவதற்கு மற்றுமொரு காரணமாகும்.

சுனாமியால் கல்முனைப் பிராந்தியத்தில் கடற்றொழிலுக்கு 81 கோடி ரூபா சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பீடொன்று தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில கடற்றொழில் துறைக்கு இந்நிலை[illegible] அரசு 30 கோடி ரூபாவை முதற்கட்டமாக வழங்கியுள்ளதெனக் கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ரி.பியசேன தெரிவித்துள்ளார்.

தோணி, வலை இருந்தால் இன்றும் தமது தொழிலுக்குத் திரும்பவிருப்பதாக மீனவர் நமசிவாயம் கூறுகிறார். கடற்றொழில் நூறு வீதம் சீராகத் திரும்ப பல மாதங்கள் எடுக்கலாம். அதுவரை மக்கள் இறைச்சி, முட்டை, கருவாடு, இறால் போன்றவற்றில் தங்கியுள்ளனர். (க)

## 20 வருடங்களாகத் திருத்தப்படாத பாதைகள் திருமலையில் புனரமைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இருபது வருடங்களுக்கும் மேலாகக் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்புகள் இன்றிக் கிடக்கும் பிரதான பாதைகள் அனைத்தும் சீரமைக்கப்படும். இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளைப் புனர்வாழ்வளிப்பு, திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சின்போது, ஜனாதிபதி அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாதைகள் தொடர்ச்சியாக மூன்று முறை சிதைகப்பட்டுள்ளன.

இருபது வருடத்தொடர்யுத்தத் தாக்குதல், இரண்டாவதாக ஏற்பட்ட பெருவெள்ளம், இறுதியாக இப்பிரதேசத்தையே சிதைத்து விட்ட ஆழிப்பேரலை.

இதனால், தம்பலகாமம் - திருகோணமலை வீதி, கிண்ணியா - தம்பலகாமம் வீதி, கிண்ணியா-புல்மோட்டை வீதி என்பன வெகுவாகப் பாதிக்கப்பட்டன. மாகாணசபையோ அல்லது மத்திய அரசோ இப்பாதைகளைச் சீரமைக்க எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இப்பிரதேச மக்கள் மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே நடத்தப்பட்டுள்ளனர்.

எனவே, ஆழிப்பேரலை அனர்த்தப் பணிகளுடன் மேற்குறிப்பிட்ட பாதைகளையும் அபிவிருதத்தி செய்யவேண்டும் என அமைச்சர் வலியுறுத்தி உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியுடன் பாதை அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண சபை என்பனவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் இணைத்து இப்பாதை அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கி உள்ளார்.

இதற்கான பூர்வாங்க மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கபட்டுள்ளன என அமைச்சர் மஜீத் தெரிவித்தார்.

அதேவேளை, தற்போது மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள சூரன்கள் - ஏ.டி.கே.பிரதான பாதைப் பராமரிப்பை மத்திய அரசு பொறுப்பேற்று அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஆவன செயவதறகு ஜனாதிபதி தம்மிடம் உறுதியளிததார் என்வும் அமைச்சர் மஜீத் தெரிவித்தார்.(க-3)

## சுனாமியில் உயிரிழந்தோரின் நினைவாக வெள்ளியன்று அஞ்சலி

### கல்முனையில் விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 40ஆம் நாள் நினைவை முன்னிட்டு கல்முனையில் அஞ்சலி நிகழ்வுகளும் பிரார்த்தனை நிகழ்வுகளும் நடைபெறவிருக்கின்றன.

கல்முனை சாலூரம் அமைப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கல்முனை மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விஷேட பூஜையை நடத்தவுள்ளனர். அதன்பின்பு மாபெரும் அன்னதான வைபவத்தையும் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். அன்று நண பகல் 12.00 மணிக்கு சகல ஆலயங்களிலும் மணியோசை ஒலிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அம்பாறையில் மரணித்த 10 ஆயிரம் பேருக்கும் ஆத்மசாந்தி வேண்டி இறைபிரார்த்தனையை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அமைப்பின் தலைவர் டாக்டர் ரி.மதனகோபால் தெரிவித்தார்.

இதேவேளை- திருக்கோயில் பிரதேசத்திற்கான 40ஆம் நாள் நிகழ்வு தம்பிலுவில் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திலும் விஷேட பூஜை நடைபெறும்.

பாண்டிருப்பில் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயச் சூழலில் 427 குடும்பங்கள் 'யுனிசெவ்' முகாமிட்டுத் தங்கியுள்ளனர். பாண்டிருப்புப் பிள்ளையார் ஆலயம், கல்முனை தா[illegible] பிள்ளையார் ஆலயம் போன்றவற்றிலும் சுனாமி அகதிகள் கடந்த ஒருமாத காலத்திற்கு மேலாகத் தங்கியுள்ளனர். ஆலயம் சமூக ஸ்தாபனமாகச் செயற்படுவது கண்டு இந்துசமய அபிமானிகள் அவ்வாலய நிர்வாகத்தினருக்கு வாழ்தது தெரிவித்துள்ளனர். (3)

## கிழக்கில் நிவாரணப் பணிகளில் பல்வேறு அமைப்புகள் பங்கேற்பு

காரைதீவு,பெப்.2

தேசிய முஸ்லிம் இளைஞர் ஒன்றியம் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

சவூதி தூதுவராலய அதிகாரி எம்.ஐ. மாஹிா தலைமையிலான குழுவினர் முகாம்களுக்கு நேரடியாகச் சென்று நிவாரணப் பொருள் களைக் கையளித்து வருகின்றனர்.

காரைதீவு விபுலானந்தர் மணிமண்டப அகதி முகாமிற்கும் சென்று பொருள்களை முகாம் பொறுப்பு கிராம அதிகாரி ரி.நவரெட்ணசாமியிடம் கையளித்தனர்.

இதேவேளை, கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனமும் மேற்படி நிவாரணப் பொருள்களைக் கையளிப்பதோடு, வைத்திய முகாமையும் நடத்திவருகின்றனர்.

தற்போது முன்பள்ளிப் பாடசாலைகளை நிறுவிச் சிறுவர்களுக்கு உளச்சீராக்கப் பயிற்சியளித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, கண்டி திரித்துவக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அடங்கலான குழுவினர் காரைதீவுக்கு வந்து பாடசாலை துப்பரவாக்கப் பணியில் ஈடுபட்டதுடன் ஒரு தொகைப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

மலேசியா டாக்டர்கள் குழுவொன்று டாக்டர் பேராசிரியர் என்.கதிர்காமநாதன் தலைமையில் நடமாடும் வைத்திய முகாமை அகதி முகாம்களில் நடத்திவருகின்றனர். (3)

## கல்முனை வலயத்தில் 457 கல்விச் சமூகத்தினர் பாதிப்பு

சுனாமி அனர்த்தத்தில் கல்முனை வலயத்தைச் சேர்ந்த 457 ஆசிரியர்கள், அதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிசாம் தெரிவித்தார்.

19 அதிபர்களும் 398 ஆசிரியர்களும் 40 கல்விசாரா ஊழியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 206 ஆண்களும் 251 பெண்களும் அடங்குவரென்று மேலும் அவர் கூறினார்.

இதேவேளை -

கல்முனை வலயத்தில் 203 ஆசிரியர்கள், அதிபர்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர். 10 அதிபர்களும் 160 ஆசிரியர்களும் 33 கல்விசாரா ஊழியர்களும் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

இவர்களில் 99 ஆண்களும் 104 பெண்களும் அடங்குவரென்று பணிப்பாளர் நிசாம் மேலும் தெரிவித்தார். (3)

# எதிர்கால உன்னதத்தை உருவாக்க உந்துதல் தரும் 110ஆம் ஆண்டுவிழா

## அடக்கத்துடன் இன்று ஸ்கந்தாவில்

சைவ சமயத் தத்துவங்கள், நம்பிக்கைகள, பாரம்பரிய விழுமியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் வாழ்வதற்குத் தேவையான அறிவை வழங்கி, ஆற்றலைத் தூண்டி, மனப்பாங்கை உருவாக்க வேண்டும் என்ற ஈழத்தமிழர்களின் கல்வி நோக்கம் மேனாட்டாரின் வருகையாலும தொடர்பாலும் சிறிது சிறிதாக மாற்றமடையத் தொடங்கிய ஒரு காலகட்டத்தில் -

கை நிறைந்த சம்பளத்தையும் சமுதாய அந்தஸ்தையும் உறுத்திப்படுத்தும் அரச உத்தியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல் முக்கியமான ஒரு குறிக்கோளாகவும், அந்தக் குறிக்கோளை நிறைவு செய்வதற்கு ஆங்கில மொழித்தேர்ச்சி இன்றியமையாத தகுதியாகவும், அந்த ஆங்கில அறிவை வழங்கக்கூடிய வசதிகளும் ஆற்றலும் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கே உண்டு என்பது பரவலாக உருவாக்கப்பட்ட நம்பிக்கையாகவும் இருந்த ஒரு காலகட்டத்தில் -

கல்வித் துறையிலே தமக்கிருந்த ஒருவித 'ஏகபோக'த்தையும் அரச செல்வாக்கையும் பயனபடுத்திச் சைவத்தமிழ்ப் பிள்ளைகளைத் தம் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றுவதைக் கிறிஸ்தவ மிஷனரிமார் தம் உள்ளார்ந்த நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட ஒரு காலகட்டத்தில் -

சைவ சமயச் சூழலில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பையும் வசதிகளையும் சைவப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்குச் சைவப் பெருமக்கள் முன்வரவேண்டும் என்ற ஆறுமுக நாவலரின் அறைகூவலுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட முன்னோடிக் கல்லூரிகளுள் ஒன்று, தனது 110 ஆவது ஆண்டு விழாவை அடக்க மாகவும் அர்த்தபூர்வமாகவும் இன்று கொண்டாடுகின்றது.

ஈழத்துத் தமிழ் மன்னர்களின் ஆரம்பகால அரசிருக்கையென வரலாற்றாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்ட கந்தரோடையில், ஈழம் வாழ் தமிழ் மக்களின் தேசிய மரம் எனக கொள்ளத்தக்க பனை மரங்கள் நிறைந்த காணி ஒன்றில், சிறிய ஓலைக் கொட்டில்களில அமரர் சின்னத்தம்பி கந்தையா அவர்களால் 1894 ஆம் ஆண்டில் கந்தரோடை ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரிலே நிறுவப்பட்டு - காலபோக்கிற் புதுப்பெயரும் புதுவண்ணமும் பூண்டு, இன்று பாரிய கட்டடங்களுடனும் பாரகன்ற புகழுடனும், தம் அறிவாலும் ஆற்றலாலும் ஆளுமையாலும் தத்தம் துறைகளில் ஆட்சி செலுத்தும் கல்விமான்கள், பேரறிஞர்கள், பேராசிரியர்கள், சிந்தனையாளர்கள், மருத்துவ கலாநிதிகள்,பொறியியல் நிபுணர்கள், நிர்வாக சேவையாளர்கள், கணக்காளர்கள், பொருளாதார வல்லுநர்கள், நீதிவான்கள், சட்டத்தரணிகள், கலைஞர்கள், இசைவல்லார்கள், எழுத்தாளர்கள், வணிக வேந்தர்கள், சமூக சேவையாளர்கள், சமயத் தலைவர்கள், கொடை வள்ளல்கள், விளையாட்டு வீரர்கள் போன்ற பல தரப்பட்ட பெரியோர்களை இலங்கைத் திருநாட்டுக்கு மட்டுமல்லாமல் உலகப் பெரு நாடுகளுக்கும் வழங்கிய பெருமையுடன் - கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியே 110ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் தகுதியை ஈட்டிய கல்லூரியாகும்.

அமரர் சின்னத்தம்பி கந்தையா அவர்களின் நல்ல எண்ணங்களும், தொலைநோக்கும் நெஞ்சுறுதியும் செயல் வீரமும் இட்ட அத்திபாரத்தில் கல்விப் புலமையும் கடமையுணர்ச்சியும் நிறைந்த அதிபர்களும் ஆசிரியர்களும் கட்டியெழுப்பிய கலாசாலையை, சைவபற்றும், தமிழ் உணர்ச்சியும் கல்வித் தாகமும் கொண்ட மாணவர்கள் நிறைத்தனர். கல்வியில் மட்டுமல்லாமல், கலை, விளையாட்டுத் துறைகளிலும் ஸ்கந்தா மாணவர்கள் வியத்தகு சாதனைகளைப் புரிந்தனர். ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராகவும் "வைசர்" வி.சிவசுப்பிரமணியம் உப அதிபராகவும் இணைந்து உருவாக்கிய "ஸ்கந்தாவின் பொற்காலம்", வைசர் சிவசுப்பிரமணியம் அதிபராகவும் க.சிவகுமாரன் உப அதிபராகவும் கடமையாற்றிய காலம் வரை நீடித்தது.

உதவி, நன்கொடை பெறும் பாடசாலையாக இருந்த காலத்தில் முகாமையாளர், அதிபர், ஆசிரியர்களிடையே நிலவிய நல்லெணணம், புரிந்துணர்வு, ஒத்துழைப்பு போன்றவை அரச பாடசாலையான பின்னர் படிப்படியாகக் குறையத் தொடங்கின. தேவையான ஆசிரியர்களைத் தெரிவு செய்வதில் அதிபர்களின் உரிமையும் ஆலோசனைகளும் புறக்கணிக்கபடுகின்றமை, ஆசிரிய நியமனங்களிலும் இடமாற்றங்களிலும் அரசியல்வாதிகளின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றமை போன்ற பல காரணங்கள் ஸ்கந்தாவின் உயர்நிலையைச் சற்றுப் பாதித்தது. இருந்த போதிலும், "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்பதற்கமைய உன்னதமான எதிர்காலத்தை சமீப காலமாக அது நோக்கி உறுதியாகக் கால் பதித்து வருவதை உள்ளார்ந்த மகிழ்ச்சியுடன் அவதானித்து வருகின்றோம். ஆங்கிலப் புலமை மிக்க அதிபர் திரு.க.சிவாஜி, பிரதி அதிபர், 'ஸ்கந்தவரோதயன்' இ.ஜோர்ஜ், உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், உப அதிபர் 'ஸ்கந்தவரோதயன்' வி.மகேந்திரன் ஆகியோரைக் கொண்ட உயர்மட்ட நிர்வாகக் குழுவுடன் இணைந்து செயற்படும் பண்பும் பணிவும் மிக்க ஆசிரியர்கள், படிப்பார்வமும் பன்முக ஆற்றல்களும் கொண்ட மாணவச் செல்வங்கள், புரிந்துணர்வும் பெருந்தன்மையும் நிறைந்த பெற்றோர்கள் அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வமுடன் கலந்துகொண்டு அவற்றின் வெற்றிக்காக அயராதுழைக்கும் உள்ளூர்ப் பழைய மாணவர்கள், கொழும்பு, லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே முதலான இடங்களில் பழைய மாணவர் சங்கங்களை அமைத்து, கல்லூரி நிர்வாகத்துடன் அடிக்கடி தொடர்புகொண்டு ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமான உதவிகளையும் செய்துவரும் வெளியூர்ப் பழைய மாணவர்கள், மேலதிகமான உதவிகளை வழங்கும் நோக்குடன ஸ்கந்தா அபிவிருத்திக் கழகத்தை உருவாக்கியுள்ள கொழும்புப் பழைய மாணவர்கள் போன்ற ஒவ்வொரு பிரிவினரதும் ஒரே இலட்சியம், ஒப்பற்ற இலட்சியம், ஸ்கந்தாவை மீண்டும் உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதே.

**சி.சிவசரவணபவன்**
(தலைவர், 110ஆம் ஆண்டுநிறைவு விழாச் சபை)

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் கொண்டாடப்பட இருந்த 110ஆவது ஆண்டு விழா அப்போதைய கடும் மழை காரணமாக இன்று நடைபெறுகிறது.

சென்ற காலத்தின் தீதிலாச் சிறப்பைச் சிந்தித்து மகிழவும், நிகழ் காலத்தில் நெருடும் பிரச்சினைகளை நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டு புறங்காணவும் எதிர்கால உன்னதத்தை உருவாக்கும் உந்துதலையும், உத்வேகத்தையும் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் கிளர்ந்தெழச் செய்யவும் இன்றைய விழா வழிகாட்டும் என்பது திண்ணம். ☆

# சூறாவளியால் தொலைந்த பாலம் 'சுனாமியால்' கிடைத்த அதிசயம்!

சுனாமி பேரலை கடற்கரை ஓரமாக இருந்த கிராமங்களுக்குள் புகுந்து அங்கெல்லாம் இருந்த வீடுகள், பள்ளிகள், கட்டடங்கள், பாலங்கள், மதகுகள் என்று அனைத்தையுமே தனது இஷ்டம்போலத் தூக்கி மோதிப்பந்தாடிச் சென்றது.




இராட்சத அலைகள் தமது ஆக்கிரமிப்பு முடிந்து மீண்டும் கடலுக்குள் சென்று முடங்கிக் கொண்ட பின்னர், கரையோரக் கிராமங்களுக்குள் சென்றவர்கள் இடிந்த கட்டடங்களையும் இருந்த, இடமே தெரியாமல் அழிந்து போன வீடுகள், கடைகள், கோயில்களின் எச்சங்களையும்தான் கண்டனர்.

இருந்தவை யாவற்றையும் இல்லாதவையாக்கிச் சென்றது தான் 'சுனாமியின்' பொது இயல்பு.

இந்தச் சம்பவங்களுக்கு மத்தியில் சுனாமியால் முல்லைத்தீவில் நடந்திருக்கின்ற ஒரு சம்பவம் முற்றிலும் வித்தியாசமானது. ஆச்சரியத்துக்குரியது.

அது என்ன சம்பவம் என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறதா? அப்படியானால் தொடர்ந்து இதை வாசியுங்கள்.

முல்லைத்தீவு நகரப் பகுதிக்கு சமீபமாக - கடற்கரையை அண்டியதாக வண்ணாங்குளம் என்றொரு கிராமம் இருக்கிறது.

முல்லைத்தீவில் சுனாமியின் கொடூரம் அரங்கேறி முடிந்த பிற்பாடு மீட்புப் பணிகளுக்கென அங்கு ஏராளம் பேர் சென்றனர்.

வண்ணாங்குளம் கிராமத்தில் கடற்கரைப் பக்கமாக மீட்புப்பணிக்கென ஓடிச் சென்றவர்களுக்கு ஓர் ஆச்சரியம் - அதிர்ச்சி காத்திருந்தது.

தாங்கள் வேறு எங்காவது பாதை மாறி வந்து விட்டோமா என்றுகூட பலர் திகைத்து நின்றனர்.

அவர்களின் திகைப்புக்கும் - அதிர்ச்சிக்கும் - ஆச்சரியத்துக்கும் காரணம் இதுதான்...

முன்பு வெறும் மண்மேடாய் கிடந்த ஓர் இடத்தில் இப்போது ஒரு பெரிய பாலம்.

மிகநீளமாக - கடற்கரைக்குச் செங்குத்தாக - நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்தது அந்தப் பாலம். பார்த்தவர்களுக்கோ பேரதிர்ச்சி. இப்படியொரு பாலம் இந்த இடத்தில் இருப்பது இவ்வளவு காலமும் தெரியாமல் போய்விட்டதே என்று அனைவரும் அதிர்ச்சியில் உறைந்துபோயினர்.

அண்மையில் சுனாமி அனர்த்தத்தைப் பார்வையிடுவதற்காக முல்லைத்தீவுக்குச் சென்றிருந்த போது இந்தச் சம்பவத்தைக் கேள்வியுற்றேன்; ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

உடனடியாக அந்த இடத்துக்குச் சென்று குறிப்பிட்ட பாலத்தைப் பார்த்தபோது நம்பவே முடியவில்லை.

அப்பப்பா.... எவருக்குமே தெரியாமல் மண்ணுக்குள் புதையுண்டிருந்த இவ்வளவு பெரிய பாலத்தை ஒருசில நிமிடங்களில் 'சுனாமி' கிளறி எறிந்துவிட்டதே...!

அந்தப் பாலத்தினுடைய 'சுயசரிதை' தெரிந்த ஒருவர் இப்போது முள்ளியவளையிலுள்ள நலன்புரி நிலையத்தில் இருக்கிறார் என்ற தகவல் எட்டியது.

உடனே அங்கு சென்று அவரைச் சந்தித்தேன். 76 வயதுடைய ஒரு முதியவர். பெயர் செபஸ்தியாம்பிள்ளை. என்னை அறிமுகப்படுத்திவிட்டு விவரத்தைக் கேட்டேன்....

அவர் சொன்னார்:




இது தம்பி... வெள்ளைக்காரன்ர காலத்தில கட்டினது எண்டுதான் எங்கட அப்பு ஆச்சி சொன்னவை. பண்டாரவன்னியன் எண்ட தமிழ் அரசனைத் தோற்கடிச்சு வெள்ளைக்காரர் முல்லைத்தீவைப் பிடிச்சதுக்குப் பிறகு இஞ்ச ஏராளமான பாலங்களையும் மதகுகளையும் கட்டினவங்களாம். அதில ஒண்டுதான் உதுகும்.

1964 ஆம் ஆண்டளவில ஒருக்கா பெரும் சூறாவளி ஒண்டு அடிச்சது. அதோடை கடற்கரையில கிடந்த மணல் வந்து பாலத்தை மூடிப்போட்டுது.

பிறகு இதைத் துப்புவு செய்து புனரமைக்க ஒருத்தரும் அக்கறை எடுக்கேல...

பிறகு காலப்போக்கில இந்தப் பாலத்தை நாங்களே மறந்துபோனம்...!

இப்பவும் நினைவிருக்கு முந்தி தொழில் முடிஞ்சு வந்து கொஞ்ச நேரம் ஆறுதலாய் இருக்கிறது இந்தப் பாலத்திலதான்... என்று கூறிமுடித்தார்.

சூறாவளியால் தொலைந்துபோன பாலம் சுனாமியால் மீண்டும் வெளிவந்திருக்கிறது!

இதுவும் ஒரு "கதை"யாகிவிட்டது.

**வாசகர்களுக்கு...!**

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இழக்கப்பட்டவர்கள் தொடர்பான இத்தகைய மெய்சிலிர்க்கவைக்கும் அதிசயம் நிறைந்த 'கதைகள்' உதயனில் தொடர்ந்து வெளிவரும்.

இயற்கையின் சீற்றம் மனிதனை எவ்வாறு பாதிப்புறச் செய்யும் , நட்டமுறச் செய்யும் என்பதற்கு சான்று பகரும் பல நிகழ்வுகள் சம்பந்தப்பட்டவர்களுடனே அடங்கிப் போகாமல் மற்றவர்களுக்கும் - எமது வாசகர்களுக்கும் - தெரிந்தாக வேண்டும் என்பதற்காகவே இந்தத் தொடர். இது காலத்தைப்பதிவு செய்யும் ஒரு பணியாகவும் அமையும்.

இத்தகைய நிகழ்வுகள் ஏதேனும் உங்களுக்குத் தெரியவந்தால் எங்களுக்கு அறியத் தாருங்கள். நேரில் சென்று சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து 'கதை' யாக்கிப் பதிவு செய்வோம்.

– ஆசிரியர்

## மீட்பு, நிவாரணப் பணிகளுக்கு வந்த

# வெளிநாட்டுப் படையினர் அனைவருமே ஒருசில நாள்களில் வெளியேறிவிடுவர்!

## இராணுவப் பேச்சாளர் நம்பிக்கை

கொழும்பு,பெப்.2

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குள்ளான பகுதிகளில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டுப் படையினரில் கணிசமானவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். எஞ்சியிருக்கும் நூற்றுக்கணக்கானவர்கள் இன்னும் ஒருசில தினங்களில் வெளியேறிவிடுவர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரெட்ணாயக்கா இவ்வாறு தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா, ரஷ்யா, ஒஸ்ரியா, ருமேனியா, கனடா போன்ற நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் அதிகமான படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். தற்போது அவர்களின் பணிகள் பெரும்பாலும் முடிவடைந்துவிட்டன. சுமார் 2 ஆயிரத்து ஐந்நூறு படையினர் இலங்கையைவிட்டு வெளியேறிவிட்டனர். இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

இந்தியப் படையினரில் 80 பேர் மட்டுமே உள்ளனர். அவர்கள் பாலமொன்றை நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். கனடாவில் இருந்துவந்த படையினரும் அம்பாறைப் பகுதியில் உடைந்த பாலங்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் சில தினங்களில் இந்தப் பணிகள் அனைத்தும் நிறைவுபெறும். அநேகமாக 5ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வெளிநாட்டுப் படையினரும் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவர்.

இலங்கைக் கடற்பரப்பில் தரித்துநின்ற வெளிநாட்டுக் கப்பல்களில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை அந்தந்த நாடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டன. ஏனைய கப்பல்களும் இன்னும் ஒருசில தினங்களில் வெளியேறிவிடும்.

வெளிநாட்டுப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்காவிட்டால் நாம் பெரும் சிரமத்தை எதிர்கொண்டிருப்போம். எமக்கு வெளிநாட்டுப் படையினர் செய்த அவசர உதவிகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாது - என்றார் அவர். (க-3)

### அல்லாரையில் தும்பு உற்பத்திப் பயிற்சி

தென்மராட்சி,பெப்.2

கைத்தொழில் அபிவிருத்திச் சபை அல்லாரைக் கிராமத்தில் தும்பு உற்பத்தி தொடர்பான பயிற்சியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

சபையின் பிரதிநிதிகளால் பயிற்சி நிலையம் ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மேற்படி கிராமத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

பயிற்சி நிலையத்திற்கான உபகரணங்கள் கிடைத்ததும் பயிற்சி ஆரம்பமாகுமெனக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-117)

### குடமுழுக்கு விழா

தென்மராட்சி,பெப்.2

சாவகச்சேரி வீரமாகாளி ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரத்தின் குடமுழுக்கு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

லண்டனில் உள்ள கோ.தேவிகரன் என்பவர் இந்த மணிக்கூட்டுக்கோபுரத்தினையும் புதிய மணியையும் நிர்மாணிக்க நிதி உதவி வழங்கியிருந்தார். சாவகச்சேரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய குரு சிவஸ்ரீ த.வீரபத்திரசிவக் குருக்கள் குடமுழுக்கினை நடத்திவைத்தார். (10-11)

### தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,பெப்.2

உழவு இயந்திரத்தில் பயணித்தவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி - கச்சாய் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த யேசுதாஸன் புலேந்திரன் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

காலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவர் அனுப்பிவைக்கப்பட்டார். (10-117)

### வாராந்த நிகழ்வு

வடமராட்சி,பெப்.2

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "வாழ்த்தி வணங்குவோம்" என்னும் தலைப்பில் ஆசிரியர் இ.கேசவன் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை க.சிவக்கொழுந்து நிகழ்த்துவார். (10-173)

## தலைவர் பிரபாகரன் மரணமானதாகப் பொய்த் தகவல் வெளியிட்டமைக்காக

# கடற்படைத்தளபதி, ஊடக அமைச்சர் இருவரும் இராஜினாமாச் செய்யட்டும்

## திருமலை தமிழ்மக்கள் பேரவை கோருகிறது

திருகோணமலை,பெப்.2

இலங்கைக் கடற்படைத் தளபதியும் முப்படைகளின் தளபதியுமாகிய தயாசந்தகிரியும், ஊடகத்துறை அமைச்சரும் பகிரங்க மன்னிப்புக் கோருவதுடன், தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டும் என்று திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்தியறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டதாகத் திட்டமிட்ட அடிப்படையில் பொய்யான செய்தியை ஊடகங்களுக்கு இநத இருவரும் வழங்கியுள்ளனர். கடற்படைத் தளபதியை மேற்கோள் காட்டியே இனவாத ஊடகங்களும், அரச ஊடகங்களும் இச்செய்தியை வெளியிட்டன. இவ்வாறான செயற்பாடுகள் ஏற்கனவேயும் நடைபெற்றுள்ளன.

இவ்வாறான செய்தியை வெளியிட்டதன் மூலம் சமாதானத்திற்கெதிரான மிகப் பயங்கரமான சதிநாச வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளனர். எனவே, இந்த மோசமான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்று இருவரும் இராஜினாமாச் செய்து மன்னிப்புக் கோரவேண்டும் - என்றுள்ளது. (3-202)

# அம்பாறையில் பலியான முஸ்லிம்களின் 40 ஆம் நாள் நினைவுதின நிகழ்வு

காரைதீவு,பெப்.2

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியில் சிக்கிப் பலியான முஸ்லிம்களின் 40ஆவது நாள் 5ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

அன்றையதினம் பிரார்த்தனை தினமாகப் பிரகடனம் செய்து இறைவனிடம் துஆக் கேட்க வேண்டுமெனப் பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்றையதினம் சம்மாந்துறையில் பிரதான அஞ்சலிக் கூட்டமும் கத்தமுல் குர்ஆன் ஓதி தமாம் செய்யும் நிகழ்வும் இடம்பெற விரிவான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சுனாமி ஏற்பட்டு தொடர்ந்து 3 நாள்களாக மூவாயிரத்து 612 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட சம்மாந்துறை மலையடிக் கிராம மையவாடியில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது.

சுனாமியின் நினைவாக அந்த மையவாடியை நவீனமாக்கி நினைவுத் தூபியை நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் நான்கு தினங்கள் மருத்துவமுகாம்

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு நரம்பியல் மற்றும் சத்திரசிகிச்சை தொடர்பான இலவச மருத்துவ சிகிச்சை முகாம் எதிர்வரும் 28ஆம் திகதிதொடக்கம் நான்கு நாள்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்படவுள்ளது.

கனடாவைச் சேர்ந்த இரு மருத்துவ சிகிச்சை நிபுணர்கள் இதில் கலந்து சிகிச்சையளிக்கவுள்ளனர்.

சாவகச்சேரி நீதிவான் பா.சுப்பிரமணியம் இந்த மருத்துவ சிகிச்சை முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 3ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த மருத்துவ சிகிச்சை முகாமில் கலந்துகொள்ளவுள்ள நோயாளர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்தப்படும் முதலாவது இலவச மருத்துவ முகாம் இதுவாகும். (10-117)

## விஷஜந்துக்கள் தீண்டின

தென்மராட்சி,பெப்.2

விஷஜந்துக்களால் கடியுண்ட மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சரசாலை மத்தியைச் சேர்ந்த பாலசிங்கம் ஆனந்தராசா (வயது - 31), மீசாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினம் கிரிசாந்தன் (வயது 3½), மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவஞானம் ரவிசங்கர் (வயது-9) ஆகியோரே விஷஜந்துகளால் கடியுண்டவர்களாவர். (10-117)

# மணல் கடத்தமுயன்ற பாரவூர்தியை தடுத்துவைக்க நீதிவான் பணிப்பு

## 25 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்

தென்மராட்சி,பெப்.2

பொலீஸாரை ஏமாற்றும் போக்கில் சட்ட விரோதமாக மணல் கடத்த முயன்ற பார ஊர்தியை 60 நாள்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பார ஊர்தியில் மணல் ஏற்றி அதன் மேல் மாட்டெருவைப் போட்டுக் கடத்த முயன்ற பார ஊர்தியைச் சாவகச்சேரிப் பொலீஸ் மடக்கிப் பிடித்ததுடன், அதன் சாரதியான கணேஸ் சிவகுமார் என்பவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மேற்படி சாரதிக்கு 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், மணலைப் பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டு பார ஊர்தியை 60 நாள்கள் நீதிமன்றில் தடுத்துவைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (10-117)

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் (தலைமையகம்)**

**41, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்**



## அறிவித்தல்

**கடந்த 09.01.2005இல் நடைபெற்ற எமது சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 2005ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர் விவரம்:**

01. திரு.சி.சிவராசா - தலைவர்
02. திரு.பொ.தியாகலிங்கம் - உப தலைவர்
03. திரு.ச.செந்தில்செல்வன் - செயலாளர்
04. திரு.மு.இன்பநாயகம் - உபசெயலாளர்
05. திரு.பொ.செல்வநாயகம் - பொருளாளர்
06. திரு.வ.சுரேஷ்குமார் - நிர்வாக உறுப்பினர்
07. திரு.சி.திவாகரன் - நிர்வாக உறுப்பினர்
08. திரு.ம.சசிகுமார் - நிர்வாக உறுப்பினர்
09. திரு.பு.ஆனந் - நிர்வாக உறுப்பினர்
10. திரு.மா.சிவசுப்பிரமணியம் - போஷகர்

ஓட்டோ உரிமையாளர் சாரதிகளே! வீதி விபத்து, விபரீத செயல் என்பவற்றைத் தவிர்த்து பயணிகள், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்களுக்கும் இடையூறற்ற வகையில் சகல ஓட்டோக்களையும் தங்களது பகுதிக்கேற்ப கிளைச் சங்கங்கள் மற்றும் தலைமைச் சங்க மூலம் பதிவுசெய்யும் சாரதி அனுமதிப்பத்திரம், ஊர்தி உரிமை ஆவணம் என்பவற்றை சரியான முறையில் வைத்துக்கொள்வதுடன், பாதுகாப்பான - கட்டுப்பாடான சேவை செய்யுமாறு மீண்டும் மீண்டும் அறியத் தருகின்றோம்.

**- நிர்வாகம்.**

(41608) (24-11-45)

# OUR CONDOLENCES



Lion: **K.Selvaratnam**

Lion Lady **Nagaranee Selvaratnam**

**Our Heart felt Condolences on the demise of lion Selvaratnam 28-01-2005 and lion Lady Nagaranee 27-01-2005 departed from our midst suddenly. We convey our sympathies to all dear ones of the family. We pray that the souls will Rest in Peace.**

District Governor: Lion **S.Sivananthan** *M.J.F. J.P.*
Vice District Governor: Lion **Saratha Gunasekara** *M.J.F.*
Cabinet Treasurer: Lion **S.Ragavan**
District Chairperson: Lion **Lalith Fernando**
President Lion Club Manipay Parish: Lion **S.Sivarajeeswaran**
Deputy Cabinet Secretary (North) **S.Gnanarajah** on behalf of
Lions Club of North and
Cabinet Officers of North.

(26-11-45-24)


# யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## "Rainbow Travel & Tours" - யாழ். மண்ணில் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**கொழும்பைத் தலைமை அலுவலகமாகக் கொண்ட இந்நிறுவனம் யாழ். வாடிக்கையாளர்களின் அநேக வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை 32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (முதலாம் மாடி) என்னும் முகவரியில் ஆரம்பித்துள்ளோம்.**

**எமது ஸ்தாபனத்தின் பல சேவைகளுள் சில சேவைகளாக,**

1. அனைத்து வெளிநாடுகளிலும் வசிக்கும் உங்கள் உறவினர்களுக்கு "**பொதி அனுப்பும் சேவை**"
(கனடா. பிரான்ஸ். சுவிற்சர்லாந்து. லண்டன். ஜேர்மனி)
(உணவுப் பண்டங்கள். உடுதுணிகள். கடிதங்கள். அன்பளிப்புப் பொருள்கள்) மற்றும் சகலவிதமான பொருள்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் எம்மூலம் அனுப்பிவைக்கலாம்.
2. சர்வதேச நாடுகளுக்குரிய "**விமான ரிக்கற்றுகளை**" பெற்றுக்கொள்ளலாம்.
(ஒரு வழிப் பயண. இரு வழிப் பயண Ticketகளை கொழும்பில் பெறுவதிலும் பார்க்க மிகக்குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(லண்டன். சுவிஸ். ஜேர்மனி. கனடா. சென்னை. சிங்கப்பூர் போன்ற நாடுகள் & மத்தியகிழக்கு நாடுகள்)
3. யாழ். குடாநாட்டில் திருமண வைபவங்கள் மற்றும் குதூகலமான கொண்டாட்டங்களுக்கான ஒழுங்கமைப்புகள்.
   1. **திருமண மண்டபங்கள்**
   2. **உணவுப் பரிமாற்றங்கள் (சிற்றுண்டி, மதியபோசனம்)**
   3. **திருமணக் கார் சேவை**

*✳ நடன, நாடக அரங்கேற்ற விழாக்கள் போன்றவற்றுக்கான ஒழுங்கமைப்புகள் (வீடியோ படம் பிடித்தல்)*

4. யாழ். நகரில் இருந்துகொண்டே Passport பெறுவதற்கான ஏற்பாடுகள் (புதுப்பித்தல். பிள்ளைகளை இணைத்துக் கொள்ளுதல். பெயர் மாற்றம். புதுப்பித்தல்) போன்ற சேவைகளுக்குரிய அனைத்து ஆவணங்களும் எமது ஸ்தாபனத்தின் மூலம் விரைவாகச் செய்துகொடுக்கப்படும்.
(பிறப்பு அத்தாட்சிப் பத்திரம். திருமண அத்தாட்சிப் பத்திரம். ஆங்கில மொழிபெயர்ப்பு)

**ஸ்பொன்சர் வசதி உடையவர்களுக்கு...**

5. சர்வதேச நாடுகளுக்கு செல்வதற்கான விசா ஒழுங்கமைப்புகள்
   - **வெளிநாடு செல்வதற்கான ஆலோசனைகளும் ஆவணத் தயாரிப்புகளும்**
   - **மத்திய கிழக்கு நாடுகளில் (டோகா. கட்டார். டுபாய்) வேலை பெற்றுச்செல்வதற்குரிய ஆலோசனைகள்.**
6. யாழ். கொழும்பு உள்ளூர் பிரயாண சேவைகள்.

**இத்துடன் இன்னும் பல சேவைகள் நடைபெறுகின்றன. வாடிக்கையாளர்களே நீங்கள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லை. யாழ்.மண்ணில் இருந்துகொண்டே இந்த அனைத்து சேவைகளையும் ஒரே குடையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:**

## RAINBOW TRAVEL & TOURS

**32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (முதலாம் மாடி).**
**24 மணிநேர தொலைபேசி அழைப்புகளுக்கு:**
Hotline: **0777 328219**

(சி-40752) (24-11-45)


# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை யோகநாதன்

**(5ஆம் வட்டாரம் - நயினாதீவு)**



5ஆம் வட்டாரம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 473/4, இரத்தினம் லேன், கே.கே.எஸ். வதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தாமோதரம்பிள்ளை யோகநாதன் அவர்கள் நேற்று 01.02.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - முத்தாச்சிப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், இராசேஸ்வரி (உதவிப் பிரதேச செயலர் - நல்லூர்), ஏகாம்பரநாதன் (கனடா), ஸ்ரீதரன் (கனடா), லோசனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினராசா (உத்தரவுபெற்ற நில அளவையாளர்), நஞ்சிதமலர் (கனடா), அஞ்சலா (கனடா), கமலநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் இராகுலன் (வைத்திய கலாநிதி), ரமணன் (கனடா), ரதினி (பல்மருத்துவபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), நிதர்ஷன், பாவலன், சேயோன் ஆகியோரின் அன்பு மாமாவும் துக்ஷா, தர்சிஸ், ஆரா, ஆரணி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*473/4, இரத்தினம் லேன்,*
*கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(41612) (42-11-45-24)

**தகவல்:**
**திரு. இ. இரத்தினராசா**
**மைத்துனர்.**

## கந்தசாமி நல்லதம்பி



மயிலியதனையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ். வீதி, உடுப்பிட்டி வாசிகசாலையடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி நல்லதம்பி அவர்கள் 29.01.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மாவின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற சிந்தாமணி - காந்தியம்மாவின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நகுலேந்திரன் (கண்ணன், சேவாலங்கா மன்றம்), கலைவாணன் (F.R.C. யாழ்ப்பாணம்), கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவாணியின் அன்பு மாமனாரும் ஞானம்பாள் (கனடா), தங்கப்பாக்கியம் (டென்மார்க்), காலஞ்சென்ற துரைராசசிங்கம் மற்றும் செல்லப்பாக்கியம் (தாதி உத்தியோகத்தர் தெல்லிப்பழை), குணபாலசிங்கம் (லண்டன்), அழகரத்தினம், வீரசிங்கம், இரத்தினசிங்கம் (பிரியா ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு), அன்னலட்சுமி, மகேந்திரராணி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2005) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ். வீதி,*
*உடுப்பிட்டி வாசிகசாலைச் சந்தி,*
*உடுப்பிட்டி.*

(41614) (24-11-45)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**





நடந்த மாதம் 28 ஆம் திகதி கிளிநொச்சி, இரணைமடுச் சந்தியில் வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. கட்டடத் திறப்பு விழாவில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் உரையாற்றுவதையும், அருகில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் செ.கோ.தருமராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

திறப்புவிழா நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் - வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் முகப்புத்தோற்றத்தை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:பரந்தன் செய்தியாளர்)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோருக்கு 'யுனிசெவ்' உதவி

கிளிநொச்சி,பெப்.2

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு கிளிநொச்சியிலுள்ள 'யுனிசெவ்' நிறுவனம் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் முற்றாக அழிந்த 3 பாடசாலைகளுக்குத் தலா 10 கொட்டகைகள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் நலன்புரி நிலையங்களாக இயங்குகின்ற பாடசாலைகளைத் துப்புரவு செய்தல், தொற்று நீக்கல் நடவடிக்கை போன்றவற்றையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், தளபாடங்கள், சீருடைத்துணி என்பவற்றையும் வழங்கி வருகின்றன.

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 பாடசாலைகளின் மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் மற்றும் தற்காலிகக் கொட்டகைகள் என்பனவும் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

(த-202-305)

## ஒளித்தெறிப்புக் கைப்பட்டி கிளிநொச்சியில் அறிமுகம்

### இரவில் விபத்துக்களைத் தடுப்பதற்காக!

கிளிநொச்சி,பெப்.2

தமிழீழ காவல்துறையினர் இரவில் வீதி விபத்துக்களைத் தடுக்கும் ஒளித்தெறிப்புக் கைப்பட்டிகளை அறிமுகம் செய்துள்ளனர்.

கிளிநொச்சி காவல்துறைப் பொறுப்பாளர் சிவகுமார் தலைமையில், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கருத்தூட்டல் நிகழ்விலேயே இந்தக் கைப்பட்டி அறிமுகம் செய்யப்பட்டது.

இரவில் நடமாடும் பாதசாரிகளை இனங்காணமுடியாமல் பல்வேறு விபத்துக்கள் ஏறபடுவதை அவதானித்தே இந்தக் கைப்பட்டி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகக் காவல் துறையினர் தெரிவித்தனர். (த-305-202)

## விதைநெல் உற்பத்தியாளர்களுக்கு கிளிநொச்சியில் பயிற்சிப் பட்டறை

ஸ்கந்தபுரம்,பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு விதைநெல் உற்பத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் நடத்தப்பட்டது.

கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள நியாப் சுற்றுலா விடுதியில் நடைபெற்ற இப்பட்டறையை உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்கள விரிவாக்கப் பகுதியினர் இணைந்து நடத்தினர்.

இந்த நிகழ்வில் விதைநெல் உற்பத்தி தொடர்பான கருத்துரைகளையும் பயிற்சிகளையும் கண்டி கண்ணொறுவ விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள். களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் வழங்கினர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட விவசாயி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்:-

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இவ்வாறான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

புதிய முறைகள் மூலம் பயிர்ச் செய்கையில் விளைச்சலை மேம்படுத்துவது தொடர்பாக பல விடயங்களை அறிந்து கொண்டோம் - என்றார்.

(த-381-204)

## கிளிநொச்சியில் ஆயிரம் வீடுகள் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கும்

கிளிநொச்சி,பெப்.2

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைச் செயலாளர் எஸ்.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

500 சதுர அடிகொண்ட வீடுகள் ஒவ்வொன்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும். அதற்கான மாதிரித் தெரிவு மற்றும் இடஅமைவு என்பவை பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது - என்றார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளை தற்போது பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பு அலுவலகமாக இயங்கி வருகின்றது.

கட்டைக்காடு, செம்பியன்பற்று போன்ற இடங்களுக்கு மருத்துவ உபகரணங்கள், தண்ணீர்த் தாங்கிகள் என்பவை கொள்வனவு செய்து அனுப்பி வைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-305-202)

# வீதிகள் சீரின்மையால் போக்குவரத்தில் இடர்ப்படும் வன்னிப் பிரதேச மக்கள்

வன்னிப் பிரதேசத்தின் பல வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. இவ்வீதிகளைத் திருத்துவதற்கென வீதிகளில் கிரவல் கற்கள் பறிக்கப்பட்டும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இங்குள்ள சில வீதிகளின் இன்றைய நிலைமை குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை.

### பல்லவராயன்கட்டு - மன்னார் பிரதான வீதி

பல்லவராயன் கட்டு சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள மன்னார் பிரதான வீதியின் மதகு அரைப்பங்கு உடைந்து விட்டது. மிகுதி அரைப்பங்கு இன்றோ நாளையோ உடைந்து விழும் நிலையில் உள்ளது.

இதனால் இவ்வீதியால் முழங்காவில் வெள்ளாங்குளம், இலுப்பக்கடவை, மன்னார் போன்ற இடங்களுக்கு மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படப்போகின்றது.

### முழங்காவில் - பூநகரி - மன்னார் பிரதான வீதி

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக மண்டக் கல்லாறுப் பாலம் உட்படச் செம்மண் குண்டு என்ற இடத்திலும், தெளிகரை என்ற இடத்திலும் ஆங்காங்கே பத்துக்கு மேற்பட்ட இடங்களில் தினமும் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாது புதைந்து விடுகின்றன. பின்னர் வாகனங்கள் கஷ்டத்தின் மத்தியில் எடுத்துச்செல்லப்படுகின்றன. அண்மையில் தமிழீழ போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ் ஒன்று புதைந்து இரு நாள்களின் பின்னர் சென்று எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செய்திக்கட்டுரை

### பூநகரி - பரந்தன் வீதி

பூநகரியில் இருந்து பரந்தன் வீதி ஐந்தாம் மைல் வரைக்கும் வீதி திருத்துவதற்கென மழைக்கு முன் கிரவல் பறிக்கப்பட்டது. அவற்றைப் பரவி உரியமுறையில் செப்பனிடாத காரணத்தால் இப்போது வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாதநிலை தோன்றியுள்ளது.

வீதியோரத்தில் பறிக்கப்பட்ட கிரவல், பரவப்படாத காரணத்தால் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்தும்போது புதைகின்றன. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி கொழும்பில் இருந்து பொருள்களுடன் வந்த பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான லொறி ஒன்று தம்பிராயில் புதையுண்டது. இதனால், தம்பிராய் ஊடான வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டு 4 ஆம் கட்டை சென்று பூநகரி - மன்னார் வீதியால் வாகனங்கள் பயணத்தைத் தொடர்ந்தன.

### பள்ளிக்குடா பிரதான வீதி


அண்மையில் பெய்த பெரும்மழை காரணமாகப் பள்ளிக்குடா பிரதான வீதி, மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இவ்வீதியில் ஏற்றும் பணியைத் தமிழீழப் போக்குவரத்துக் கழகம் நிறுத்தியுள்ளது. இவ்வீதி திருத்தத்திற்கென பிரதான வீதியில் கல் பறிக்கப்பட்டும் இவற்றை இன்று வரை பரவவில்லை. வீதிகளில் ஏற்பட்டுள்ள குழிகளில் மழை நீர் நிறைந்து சேறும் சகதியுமாக உள்ளது. இதனால் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டுள்ளன. மன்னார் பிரதான வீதிக்கு மக்கள் 03 கிலோ மீற்றர் நடந்து வந்தே தாங்கள் செல்லும் இடங்களுக்கு காத்து நின்று பயணம் செய்கின்றனர்.

### மன்னார் - ஜெயபுரம் - கிளிநொச்சி பிராதன வீதி

ஜெயபுரம் - வன்னேரிக்குளம் (முடக்கன் ஆறு பாயும் இடம்) வீதியில் உள்ள பிரதான பாலம் திருத்துவதற்குப் பல மாதங்கள் முன்னே, திட்டமிடப்பட்டும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. இதனால், இன்று இவ்வீதி யூடான வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளது இதனால், மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

**பொ.தங்கராஜா**
ஜெயபுரம் செய்தியாளர்

இவ்வீதிகளின் திருத்த நிலை குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்விடயம்குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?




சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கட்டைக்காடு பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள 30 பேருக்கு யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகம் துவிச்சக்கரவண்டிகளை அண்மையில் வழங்கி உதவியது.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவரான ற்மேஸ் வழங்கிய இரண்டரை லட்சம் ரூபா பணத்தில் பெறப்பட்ட சைக்கிள்களை, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கையளிக்கப்படுவதையும் அருகே கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## வல்வை.சிதம்பரா மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வடமராட்சி,பெப்.2

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவார்.

கற்றல் உபகரணங்களை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை வழங்கியுள்ளது.

(த-173)

## அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

*குயின்ஸ் அழகுக்கலை நிலையத்தினால் நடத்தப்படும் மூன்றுநாள் பயிற்சி வகுப்புகள் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில்*
*(வெள்ளி, சனி, ஞாயிறு)*

**மெதடிஸ் சேர்ச், ரிம்மர் கோல், 9, வேம்படி றோட், யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரியில் காலை 9.00மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். இதில் சாறி வேலைப்பாடு, முத்துமாலை வேலைப்பாடு, மட்பாண்ட் அலங்காரம், கிறிஸ்ரல் அலங்காரம், ஸ்ரென்சில் வேக், பொயில் வேக், எம்போஸ் வேக், புளொக் பெயின்ரிங், மணல் வேலைப்பாடு, மலர்செண்டு தயாரித்தல் என்பன கற்பிக்கப்படும். பயில்வோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**அழகுக்கலை ஆசிரியர்: செல்வி ப.குயின்ரா**
**0776159468, 222 2385**

ஏனைய பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றது.
புகைப்பட ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(41617) (26-16)


## கண்ணீர் அஞ்சலி



## அமரர் செல்லையா குணபாலசிங்கம்

(முன்னாள் அதிபர், வேலணை மத்திய கல்லூரி)

வேலணை மத்திய கல்லூரியை
முதன்மைப்படுத்துவதற்காக அயராது உழைத்து
பல்லாயிரக்கணக்கான மாணவர்களின்
உயர்வுக்கு வழிகாட்டிய
ஆசானின் பிரிவுத்துயர் கேட்டு
அதிர்ச்சியடைந்தோம்.

*ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும்*
*கூடி இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

தாய்ச் சங்கமும்
பழைய மாணவர் சங்கக் கிளைகளும்,
பெரிய பிரித்தானியா, பிரான்ஸ்,
ஆஸ்திரேலியா, கனடா, கொழும்பு.

யா/சேர் வை.து.ம.ம.வி.
(வேலணை மத்திய கல்லூரி).
வேலணை. (41615)(42-26-16)

## மரண அறிவித்தல்கள்

### நாராணி கந்தசாமி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாராணி கந்தசாமி 29-01-2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாராணி - தெய்வானையின் அன்பு மகனும் வல்லிபுரம் - பூரணம் தம்பதிகளின் அருமை மருமகனும் இராசமலரின் (மலர்) அன்புக் கணவரும் றூபி (லண்டன்), சுகிர்தா (டென்மார்க்), அஜன் (லண்டன்), யனீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகநாதன் (லண்டன்), அன்ரன் (டென்மார்க்), சியாமளா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.02.2005 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.*
(41597)(26-16)
தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா கனகம்மா



மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கந்தையா அவர்கள் 01.02.2005 செவ்வாய்க்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - ஆச்சிமுத்து ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பொன்னம்மா ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பியையா, பொன்னுத்துரை, வீரசிங்கம், செல்லம்மா, தம்பிரத்தினம் மற்றும் நல்லம்மா ஆகியோரின் சகோதரியும் மனோன்மணி, சிவயோகராணி (ஆஸ்திரேலியா), சிவகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (துரை மதுபான நிலையம்), கணேசன் (ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர், ஆஸ்திரேலியா), தர்மகுலசிங்கம் (தே.சே.வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு.திருமதி யசோதரன் - பாரதி (ஆஸ்திரேலியா), திருமதி உமாகேஜினி சோதீஸ்வரன் (நியூஸிலாந்து), உமாலோகேசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), ஜெயரூபன், சுபராஜ், துரைதாசன், உமாஜோதினி, பிரபாஜினி, சஞ்ஜீவன், நிஷாந்தினி, ராம்பிரசாத் ஆகியோரின் பேர்த்தியும் காசிநாத், வசிநாத் (நியூஸிலாந்து) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2005) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் மட்டுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.*
*தொலைபேசி:- 077 6660459,*
*0773039596.* (41613)(26-16)
தகவல்:
குடும்பத்தினர்.


## விசேட ஆங்கிலம்

சட்டமாணியைத் தெரிவுசெய்த மாணவர்களுக்கானது (விடய ஆய்வு).
G.A.Q., B.A., A/L வினாத்தாள் மீட்டல்

**ஆரம்பம்: 04.02.2005**

உயரப்புலபிள்ளையார் கோயிலடி,
விதானையார் வளவு,
ஆனைக்கோட்டை.
(40610)

## VACANCIES

கல்வி ஸ்தாபனம் ஒன்றிற்கு தென்மராட்சியிலும், யாழ்நகரிலும் பின்வரும் ஆளணிகள் தேவை.

1. ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய பாலர் பாடசாலை ஆசிரியைகள்
2. பகுதி நேர ஆங்கில ஆசிரியைகள் (சிறார்களுக்கான)
3. பொறுப்புடன் வேலை செய்யக்கூடிய அலுவலக உத்தியோகத்தர்கள் (பெண்கள் மட்டும்)

மேற்கூறப்பட்ட பணிநிலைகளில் பதவி வெற்றிடங்கள் உள்ளன. விண்ணப்பங்களோடு பின்வரும் நேரங்களில் நேரில் வரவும்.

நாட்கள்

வியாழன் 03.02.05, 3.00p.m - 5.00p.m
அல்லது
செவ்வாய் 08.02.05, 3.00p.m - 5.00p.m

**140, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**


## வீதி சேதம்

வடமராட்சி,பெப்.2

அச்சுவேலி மத்திய பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளது.

இலுப்பையடியில் உள்ள இவ் வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டு நீண்டகாலமாகியும் இன்னமும் திருத்தப்படாமையினால் வாகன ஓட்டிகள் வாகனங்களை ஓட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

(த-173)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.2

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு நாளை மறுதினம் வெள்ளிகிழமை மாலை 6.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுவில் பால முருகன் அறநெறிப் பாட்சாலையின் ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்த ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத் தமிழ்வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் ர.ஜதீசனின் உரையும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(3-203)

## மூவருக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த மூன்று பார ஊர்திகளின் சாரதிகளுக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் மூன்று பார ஊர்திகளின் சாரதிகளுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

(10-117)


## பத்திரிகை விநியோகிப்போர்

கொழும்பு மாநகரப் பகுதியில் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு 20 - 30 வயதிற்குட்பட்டவர்கள் உடனடியாகத் தேவை.

மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான 'லைசென்ஸ்' உள்ளவர்கள் பூரண சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

தங்குமிட வசதி செய்து தரப்படும்.

அனுபவம் உள்ளவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 09.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக

**இல:2493, மே/பா உதயன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(சி-407507)(26-16)


**DEPARTMENT OF HEALTH SERVICES**
**TEACHING HOSPITAL, JAFFNA**
**EXTENSION TO WARD NO - 26 GENERAL HOSPITAL, JAFFNA.**

## TENDER NOTICE

01. Chairman, Divisional Tender Board, Teaching Hospital. Jaffna, will receive sealed tenders for the construction of Extension to Ward No-26 Teaching Hospital, Jaffna and receiving will be closed at 10 a.m on 15/02/2005.
Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna up to 07/02/2005 on payment of a non-refundable fee of Rs: 500/-
02. Tenders will be opened immediately after the closing at the Office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.
03. Tender Forms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL)
04. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital. Jaffna to receive before the closing time or deposited in the Tender Box kept for this purpose.
05. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's Office CECB, Teaching, Hospital, Jaffna
06. For further details please contact Hospital Secretary, G.H, Jaffna.

**Chairman,**
DivisionalTender Board,
Teaching hospital, Jaffna

(சி40756)


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6648828 முதல் 6660772 வரை
சீட்டிழுப்பு இல. 105 திகதி 31-1-2005

வெற்றி எண்கள் **0 2 7 5 5 2** சுப்பர் எண் **14**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,74,94,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,74,94,725/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,044 | 500/- | 5,22,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,460 | 50/- | 5,23,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,642 | 10/- | 10,36,420/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 103 | 1,000/- | 1,03,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,046 | 100/- | 1,04,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,362 | 20/- | 2,07,240/- |
| மொத்தம் | 126,794 | | 51,88,860/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 51,88,860/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,77,85,525/-**

தொடர் இல. 7608966 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 பெப்ரவரி 03 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6649087-3-79
6650417-9-30
6653554-2-67
6658656-3-39
6655967-8-77
6650338-6-70
6656072-6-70
6653406-2-44

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

**மனோகரா** யாழ்ப்பாணம்



இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
விஜய், திரிஷா மற்றும் பலர்
நடித்த **திருப்பாச்சி**
மூன்றாவது வெற்றிவாரம்
காட்சி : 10.30, 2.30, 6.30,
9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை



இன்று முதல் பிரசாந், சினேகா
நடித்த
**ஆயுதம்**
நேரம்: 11.00 2.45 6.00 (பு.நே.) (C/40667)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி,
வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்



**ஐயா** (ரீல்ஸ்) இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

சத்தியராஜ், நமிதா,
மும்தாஜ் நடித்த
**மகா நடிகன்**
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே.)



**A/L GENERAL ENGLISH**

**paper class** வியா., வெள்.
- 5.30 p.m.

By:T.THANENDRAN S.L.T.S. 2-11
B.Com., H.N.D.A., P.G.Dip. in Edu.

**COLLEGE OF ENGLISH**

பிறவுண் வீதி, யாழ். (41625)

## தவறிவிட்டது

நாகர் கோவில் கிழக்கு, நாகர்கோவிலைச் சேர்ந்த மயிலவாகனம் சிவகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய மணிபேர்ஸ் பருத்திதுறை சிவன்கோவில் வீதியில் 29.01.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள கீழுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

கவிதா ரேடேர்ஸ
T.P.:021 226 3928
வெஸ்ரன் யூனியன், பருத்தித்துறை.

(41767)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்



இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ்,
கபாலி, குணால், நாசர் நடித்த
**தேவதையைக் கண்டேன்**
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
(C/39654)

**பிரத்தியேக வகுப்புகள்**

A/L 2006 தமிழ்

ஆசிரியர்:நாகதமிழிந்திரன்

ஆரம்பம்: **05 - 02 - 2005**
சனி 12.00 **p.m.**
(சி-40671)

**D.C.A.** மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## ஈ.பி.டி.பி. விநியோகித்த உதவிப் பொருள்களை தீ மூட்டி எரித்த வயோதிபர்

ஈ.பி.டி.பி. அமைப்பு வழங்கிவரும் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொண்ட ஒரு வயோதிபர் அப்பொருள்களை ஈ.பி.டி.பி. அமைப்பின் பருத்தித்துறை அலுவலகத்திற்கு அருகில் போட்டு அவற்றுக்கு தீ வைத்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் மந்திகையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வைத்து சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென பாய், பால்மா வகைகள், பெட்சீற், சாரம் போன்ற பொருளகள் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகினறன. இவற்றை ஒரு சிலர் பெற்றுவருகின்றனர். இவ்வாறு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் பொருளகளைப் பெற்றுக்கொண்ட ஒருவரே பின்னர் அதனை மணஎண்ணெய் ஊற்றி எரித்தார் எனக்கூறப் பட்டது. (எ-173-70)

## தவறிவிட்டது

**YAMAHA 125R** மோட்டார்சைக்கிளின் சைற் கவர் 22.01.2005அன்று வல்லைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். கலர் (நீலம், கறுப்பு).

சிறி துர்க்கா நகைமாடம்
188, கஸ்தூரியார் வீதி
(41610) யாழ்ப்பாணம். 077-6659737

## கண்ணீர்க் காணிக்கைகள்

எமது கல்வி நிறுவனத்தின் வர்த்தக
ஆசிரியர் *சி. பரமசிவம்* அவர்களின்
அன்புச் சகோதரி

### சீவரத்தினம் லலிதா

அவர்களின் அகாலமரணத்தால் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*A.T.C*
*INST - TUTE,*
இணுவில். (41619)
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

## Active Theatre Movement
செயல்திறன் அரங்க இயக்கம்

கிராம அபிவிருத்திச் செயற்திட்டம் - அரங்கினூடாக
அரங்கக் களநிலைச் செயலாளிகளை இணைத்துக் கொள்ளல்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்துகின்ற அரங்கினூடான கிராமஅபிவிருத்திச் செயற்திட்டத்தில் புதிதாக அரங்கக் களநிலைச் செயலாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✓ ஒரு மாதகாலம் நடைபெறும் பயிற்சியில் பங்கு கொள்வதை அடிப்படையாகக் கொண்டு தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.
- ✓ தேர்வு செய்யப்படுபவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்

வேண்டப்படும் தகைமைகள்

1. G.C.E A/L உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்
2. நாடகமும் அரங்கியலும் துறையில் பயிற்சி
3. நாடகத் துறையில் ஈடுபட்ட அனுபவம்
4. வயதெல்லை 20 – 30

விண்ணப்ப முடிவு திகதி 19.02.2005
அனுப்ப வேண்டிய முகவரி

செயல்திறன் அரங்க இயக்கம்
"அருளகம்"
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்



எமது கல்லூரியின் கணித ஆசானும்
விஞ்ஞானப்பிரிவுப் பகுதித் தலைவரும் ஆகிய

### க.சபாரத்தினம்

அவர்கள் 01.02.2005 இல் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றமை எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக!

சாவகச்சேரி இந்துக் கல்லூரி
உயர்தர மாணவர்கள் (2005) சா.இ.க.
இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.
(சி-40762)(43-14-18)

## தவறிவிட்டது

31.01.2005 அன்று திலீபன் வீதிக்கும் உரும்பிராய் கிழக்கு சேச்சடிக்கும் இடையில் காப்பு, கைச்செயின், சங்கிலி மற்றும் பெருந்தொகைப் பணம் என்பன அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர் த.மரியபெர்னாண்டோ (யோகராசா), ஊரெழு மேற்கு, சுன்னாகம் 0776176525 என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும்.

(சி-41621)

## கன்னீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட
ஆசிரியரும் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப்பிரிவு
பகுதித் தலைவருமான
அமரர்

### கனகரத்தினம் சபாரத்தினம

அவர்கள் இயற்கை எய்தியமையைக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைகின்றோம். அவரது ஆத்மசாநதிக்காகப் பிரார்த்திப்பதோடு, துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
(சி-40761)(43-14-18)

## யா/சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை

**மனைமுகாமைத்துவ பயிற்சி நெறி**
**(தலை அலங்காரம், பூவேலை, கேக் ஐசிங், உணவுப்பண்டம் தயாரித்தல்)**

மேற்படி பயிற்சிநெறி எமது பாடசாலையில் 03.02.2005 வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இலவசமாக கற்பிக்கப்படவுள்ளது. கற்க விரும்புவோர் அன்று பாடசாலைக்குச் சமுகம் அளிக்கவும்.

(41626) - அதிபர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் கணித ஆசானும்
விஞ்ஞானப்பிரிவுப் பகுதித் தலைவருமான

### கனகரத்தினம் சபாரத்தினம்

அவர்களின் திடீர் மறைவால் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்...

உயர்தர மாணவர்கள்,
*சாவகச்சேரி இந்துக் கல்லூரி.* (சி-40763)(43-14-18) 2006 சா.இ.க.

## மானிப்பாய் மகளிர் கல்லூரி கணனிப்பயிற்சி நெறி-2005

மேற்படி பயிற்சிநெறி எமது பாடசாலையில் இலவசமாக முறைசாரா கல்விப் பிரிவால் 2.2.2005 புதன்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. கற்கவிரும்புவோர் அன்றையதினம் பாடசாலைக்குச் சமுகம் தரவும்.

(41623) - அதிபர்.

## மரண அறிவித்தல்கள்

### கனகரட்ணம் சபாரட்ணம்

**(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

மட்டுவில் வடக்கு, அரசடி, சாவகச்சேரியைச் சேர்ந்த கனகரட்ணம சபாரட்ணம் அவர்கள் நேற்று (01.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் செல்வவதியின் அன்புக் கணவரும் வனுஜா, சர்மிலன், நேருஜா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமியின் மைத்துனரும் மலர்விழி (சுவிஸ்), மலர்மதி (சுவிஸ்), முகுந்தன் (பிரான்ஸ்), அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பருத்தித்துறை வீதி,*
*மட்டுவில் வடக்கு,*
*அரசடி, சாவகச்சேரி.* (41620)(43-14-18)
தகவல்:
செல்வவதி (மனைவி).

### நடராசா பராசக்தி

**(கரம்பொன்)**

கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பராசக்தி நேற்று (01.02.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மருதப்பு - அன்னப்பிள்ளையின் மகளும் காலஞ்சென்ற வைரமுத்து - முத்துப்பிள்ளையின் மருமகளும் கமலாதேவி, ஜெயதேவி, நித்தியசிவம், நித்தியராணி, சந்திரிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் குணரட்ணம், மார்க்கண்டு, ஸ்ரீதரன், செல்வநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நவரெட்ணம், ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுப்பையா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் குகநாதன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் பெரிய தாயாரும் தயாபரி, யசோதரன், யாழினி, சர்மிளா, கபேசன், சுதேசன், சுபோதன், சுயந்தினி, சுஜீவன், மயூரன், சுதர்சன், நிரோஜன், ஜனகன், ஜனனி, செந்தூரி, மயூரி, கஸ்தூரி, கஜனன், அனோசுஜிவன், ஆன்சுலக்சி, சிவனேசன், மோகன்தாஸ், மணிவண்ணன், சுதாகரன், கிருபாகரன் ஆகியோரின் பேர்த்தியும் நிருத்தன், டிலக்சி, அபிகாஸ், அர்ச்சயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2005) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பொன் மேற்கு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.* (சி-40769)(43-14-18)
தகவல்:
மார்க்கண்டு (மருமகன்).

## நீங்கா நினைவுகளில் ஓராண்டு



வையகத்திற்காய்
05 - 06 -1970

விண்ணிற்காய்
16- 01 -2004

அன்பின் இருப்பிடமாய் பண்பின் பிறப்பிடமாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – எமையெல்லாம்
பாரினில் வாழ வழிகாட்டிச் சென்ற அன்பு ஐயாவே!
ஓராண்டென்ன ஆயிரமாண்டுகள் சென்றாலும் – அன்பு
முகம் காணாது ஏங்கும் நீங்கா நினைவுகளுடன்
எம் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய அரசடி
விநாயகனை வேண்டுகிறோம்.

நாளை (03.02.2005) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அமரர்
### ஏ. இரவிச்சந்திரகுமார்

திதி: நவமி (03.02.2005)

மிருசுவில் வடக்கு, மிருசுவில்
T.P-: 0777 592644, 077 6569850 – குடும்பத்தினர்.

# நீதிபதி கொலை விசாரணை இன்று நீதிமன்றில் அறிக்கை

கொழும்பு, பெப்.02

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலை தொடர்பான புலனாய்வுப் பொலீஸாரின் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இன்று கொழும்பு பிரதான மஜிஸ்திரேட் நீதிமன்றில் விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படவுள்ளன எனப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலை வழக்கில் பொட்ட நௌபர் என்று அழைக்கப்படும் பொஹமட் நியாஸ் நௌபர் உட்பட ஆறு சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

சரத் அம்பேபிட்டியவின் கொலையில் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் நபர்களை அடையாள அணிவகுப்பில் நிறுத்தி அடையாளம் காணப்பட்ட விதம் தவறானது எனவும்-

பொட்ட நௌபரிடம் வாக்குமூலம் எதுவும் பெறாமல் அவர் தடுத்துவைக்கப்பட்டிருப்பது சட்ட முரணானது எனவும்-

பொட்ட நௌபரின் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டிரந்த வல்லியத்த கடந்த மாதம் 19ஆம் திகதி நீதிமன்றில் தெரிவித்தார்.

சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வுப் பொலீஸார் போதிய சாட்சியங்களையும், தடயங்களையும் வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-8)

## கிறிஸ்தவ விவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிந்துபோன பிரதேசங்களையும் பார்வையிட்டார்.

இன்று புதன்கிழமை பளைப் பகுதிக்கு விஜயம் செய்யும் அவர், அங்கு கத்தோலிக்க மதகுருக்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் - என்று தெரிவிக்கப்படுகின்றது.

(8-7)

## அனர்த்தப் பாதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

எனினும், இலங்கை அரசு இத்தகையை முறைமையை உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றலிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற இலங்கைக்கு, இயன்றவரை ஜப்பான் உதவும். அதற்கு ஜப்பான் எப்போதும் தயாராகவே உள்ளது.

இந்த அனர்த்தத்திற்கு முன்னரும் சமாதான நடவடிக்கைகளிலும் ஜப்பான் இலங்கைக்கு உதவியுள்ளது.

சமாதானத்திற்கான ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி தொடர்ந்தும் அவரின் பணியை ஆற்றியே வருகிறார்.

அனர்த்தத்தின் பின்னரும் ஜப்பான் இலங்கைக்கு உதவி வருகிறது. இந்த அனர்த்தத்தை, புலிகளுடன் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடியதாக இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதன் மூலம் இப்போது தேங்கிப்போய்க்கிடக்கும் பேச்சை அர்த்த புஷ்டியானதாக மாற்ற முயலவேண்டும். - எனத் தெரிவித்தார் அவர்.

(க-8)

## ஹை-ஏஸ் -மோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவேளை வழியில் உயிரிழந்தார். தனுசியன் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் புலோலி மேற்கைச் சேர்ந்த மகேந்திரராஜா ஜெயக்குமாரி (வயது 34), அவரது மகனான ஜெயரூபன் (வயது 17) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயரிழந்த சிறுவனின் சடலம் பொலீஸாரினால் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் க.மயிலேறும்பெருமாள் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். இதன் பின்னர் சிறுவனின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

(8-13-70-173)

## புலிப் போராளி...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு நின்ற அதிரடிப்படையினர் அவரை வழிமறித்துள்ளனர்.

அவர்தான்போராளி என உறுதிப்படுத்திய போதும் அதனைப் பொருட்படுத்தாது அதிரடிப் படையினர் அவரை மிக மோசமாகத் தாக்கியுள்ளனர்.

அது குறித்து உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்கணிப்புக் குழுவிற்கு உடும்பன்குளப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலாகரனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-8)

## புலிகளுடன் இணங்கிப்போக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டவர்களுக்கு 375 ரூபாவுக்கான நிவாரண முத்திரை என்பது கண்துடைப்பு. இவர்களுக்கு சதொச மூலம் வழங்கப்படும் அரிசி பாவனைக்கு உதவாதது. எந்த ஒரு கூட்டுறவுக் கடையிலும் மா ஓர் அவுன்ஸ் கூட இல்லை. அரிசியும், மாவும் இல்லாமல் எப்படி இவர்கள் சாப்பிடுவது? சீனியும், பருப்பும் மட்டுமே இவர்களுக்குக் கிடைக்கின்றது. இதை வைத்து அகதி முகாம்களில் இருப்பவர்களால் தொடர்ந்து உயிர்வாழ முடியுமா என்பதும் கேள்விக்குறி.

களுத்துறை மாவட்டத்தில் நேரடியாகச் சென்று பார்வையிட்ட மாகாண முதலமைச்சரும் இதனை ஒப்புக்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலைமையோ மிகவும் மோசம். அரசினால் முற்றாகக் கைவிடப்பட்ட நிலையிலேயே அந்த மக்கள் இருக்கின்றனர்.

அப்பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட வெளிநாட்டுத் தூதுவர்களும், தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமை, இலங்கை அரசு புலிகளுடன் இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இணைந்த ஒரு பொது வேலைத் திட்டம் இல்லாவிட்டால் தொடர்ந்தும் உதவிகளை வழங்குவது கஷ்டமான காரியம் என அவை தெரிவித்துள்ளன.

ஆனால், அரசு புலிகளுடன் இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்குவதில் சாக்குப்போக்குக் காட்டி இழுத்தடிக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியை வைத்து ஜனாதிபதி அரசியல் சூதாட்டத்தில் இறங்கியுள்ளார். இது பொதுமக்கள் மத்தியில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் பெரும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

மனிதாபிமான உணர்வுகளுடன் கிடைத்த உதவிகள் மனிதாபிமானத்துடன் பயன்படுத்தப்படவேண்டும்.

காலம் கடத்தாமல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுவான கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும், தேசிய நலன் கருதி விட்டுக்கொடுப்புடனும், பெருந்தன்மையுடனும் செயற்பட முன்வரவேண்டும்.

யதார்த்த நிலையை - உண்மை நிலைவரத்தை - உணராமல் அரசு தொடர்ந்தும் உதாசீனமாக நடக்குமானால் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். சர்வதேச உதவிகளும் தடைப்படும். அதனால் ஏற்படும் பாதிப்பு ஆழிப்பேரலைப் பாதிப்பைவிடக் கொடுமையாக இருக்கும்.

- இப்படி ஐ.தே.கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, கபீர் ஹாஷிம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (க-8)

## வன்னி புனர்வாழ்வு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, இன்று புதன்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துகொள்ளும் மாநாட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கடந்த காலத்தில் அரச அதிகாரிகள் மட்டத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் எவையுமே நிறைவேற்றப்படவில்லை. பிரயோசனமற்ற இவ்வாறான கலந்துலையாடல்களில் பங்குகொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றைய மாநாட்டில் வடமாகாணத்தைச் சேர்ந்த அனைத்து அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள்,பிரதேச செயலாளர்கள், புனர்வாழ்வு விடயத்துடன் தொடர்புடைய சிரேஷ்ட உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆழிப்பேரலையின் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட புனர்நிர்மாண வேலைத் திட்டங்கள்,அங்கு இடம்பெயர்ந்த மக்களுடைய மீள்குடியேற்றம், பாடசாலைகளை மீளவும் திறப்பது, சேதமடைந்த கட்டடங்களைத் திருத்துவது மற்றும் வீதி அபிவிருத்தி, பாலங்கள் அமைப்பு ஆகியன பற்றி இன்றைய மாநாட்டில் கலந்துரையாடப்படும் என்றும்-

தற்போது நடைபெற்றுவரும் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

## அனர்த்த நிவாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் பொறுப்புடன் செயற்படவேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பச் சர்வதேச நாடுகள் நிதியுதவி அளிக்கமுன்வந்துள்ளன. அனர்த்த நிதியை அரசு தனது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தாது.

ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச கணக்காய்வு நிறுவனமொன்று எமக்கு அனர்த்த நிவாரணத்துக்காக வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதியைக் கணக்காய்வு செய்வதற்கு முன்வந்துள்ளது. அதை நாமும் வரவேற்றுள்ளோம். அதில் ஒளிவுமறைவு ஏதும் இருக்காது. எனவே, இதுபற்றி யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 176 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. நாம் 176 பாடசாலைகளை மட்டுமே திருத்தி அமைக்கப்போகிறோம் எனத் தவறாகப் பிரசாரம் செய்யப்பட்டது. மோசமாகப் பாதிக்கப்பட்டவை அவை மட்டுமே. அதனால் அவற்றுக்கு முன்னுரிமை.

பாதிக்கப்பட்ட பகுதிகளை அரச நிறுவனக் கட்டமைப்பை முழுமையாகப் பயன்படுத்தி மீளக்கட்டியெழுப்புவோம்.

கிடைக்கும் நிதியை எப்படிக் கையாள்வது என்ற தெளிவான கொள்கை எம்மிடம் உள்ளது எனவே, இதுபற்றி யாரும் குழம்பத் தேவையில்லை.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கும்.

தேசிய கொள்கைக்கு அமைய நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் நிதியமைச்சின் செயலாளர் டி.பி. ஜயசுந்தர மற்றும் வருமானவரித் திணைக்கள ஆணையாளர் வீரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க-8)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நந்தகுமார்

கரம்பைக்குறிஞ்சி, வரணி அம்மாகடை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நந்தகுமார் அவர்கள் நேற்று (01-02-2005) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் திரு.திருமதி கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அருமை மகனும் சிவகுமார் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), அருளாணந்தகுமார் ( இசைத்துறை - யாழ். பல்கலைக்கழகம்), தவககுமார் (டோகா), கிருஸ்ணகுமார் (வரணி மகா வித்தியாலயம்), ராஜ்குமார் (மானிப்பாய் மெமோறியல் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவமலரின் (லண்டன்), அன்பு மைத்துனரும் நர்த்தனனின் (லண்டன்) பாசமிகு சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*வரணி.* (41628) தகவல்: குடும்பத்தினர்.

### செல்வி மரிஸ்ரலா சவரிமுத்து

பண்டத்தரிப்பு, பத்திமாகிரியைச் சொந்த இடமாகக் கொண்ட செல்வி மரிஸ்ரலா சவரிமுத்து நேற்று (01.02.2005) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வஸ்ரியாம்பிள்ளை சவரிமுத்து - காலஞ்சென்ற சவரிமுத்து ஞானம்மாவின் மூத்த மகளும் ஆன்மேரி லூமினாவின் அன்புச் சகோதரியும் செபஸ்ரியாம்பிள்ளை - அமலநேசனின் (விமலன்-ஜேர்மனி) மைத்துனியும், அன்ரனி-லூட்சனின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (03.02.2005) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இரங்கல் திருப்பலியுடன், பூதவுடல் அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்டத்தரிப்பு, பத்திமாகிரி.* (41620) தகவல்: அமலநேசன் (விமலன்).

## தொழிற் பயிற்சிகள் புதிய பிரிவு

- Radio TV . and Vedio Deck
- Electrical Wiring and Rewinding
- Air Conditioning and Refrigeration
- Motor cycle Mechanisam

ஆரம்பம்: 6/2/05 - 7/2/05

மேலதிக விவரங்களுக்கு

Jaffna technical institute
No. 7, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

## படப்பிடிப்பாளர் பதவி

நிழற்படம் பிடிப்பதில் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பத்திரிகையில் நிழற்படப்பிடிப்பாளர்களாகப் பணிபுரிந்தோருக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

உதயன் அலுவலகப் படப்பிடிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இத்துறையில் பயிற்சி பெற்றவர்களாகவும், நவீன நிழற்படக் கருவிகளைக் கையாள வல்லவர்களாகவும் இத்துறையில் ஈடுபாடும் ஆர்வமும் உள்ளவர்களாகவும் இருப்பது மிகவும் அவசியம். ஏற்கனவே பத்திரிகைகளில் பணிபுரிந்தவர்கள் பெரிதும் விரும்பப்படுவர்.

வயதெல்லை: 21 முதல் 30 வரை

இத்துறைக்குரிய பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்கள், தொழில் அனுபவம் குறித்த சான்றிதழ்கள், உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழ்களின் பிரதிகளுடன் 19.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2005இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.